விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | பங்குனி 05 | வெள்ளிக்கிழமை (18.03.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 89

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

# புலிகளின் விமானங்களை அழிக்க செக்குடியரசு ஏவுகணை வழங்கும்

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளிடமுள்ள விமானங்களைத் தாக்கியழிக்கக்கூடிய ஏவுகணைகளை செக்குடியரசு இலங்கைக்கு வழங்கவுள்ளதாக செக்குடியரசின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளிடமுள்ள இரண்டு விமானங்களும் எந்த நாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பது குறித்த விபரங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளிவரவில்லை.

ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையான இறக்கைகள் கொண்ட இலகுரக விமானங்களைக் கண்டறிந்து தாக்கும் திறன்கொண்ட ஏவுகணைகளை இலங்கைக்கு வழங்கவுள்ளோம்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஏவுகணைகளின் முழுமையான விபரங்களை வெளியிடவில்லை. எம். 53 என அழைக்கப்படும் கனோன் 30 எம்.எம். வகை விமான எதிர்ப்பு வகை ஏவுகணைகளை செக்குடியரசு உற்பத்தி செய்து வருகின்றது.

வாகனங்களிலிருந்து செலுத்தக்கூடிய இந்த ஏவுகணைகள் ஆயிரம் மீற்றர் முதல் 3 ஆயிரம் மீற்றர் வரையில் உள்ள இலக்கினைத் தாக்கியழிக்கும் தன்மையுடையது.

கனோன் வகை ஏவுகணைகள் விமானத்திலிருந்து வெளியேறும் வெப்பத்தை அடையாளம் காண்பதன் மூலம் விமானத்தை தொடர்ந்து சென்று தாக்கும்திறன் கொண்டது.

விடுதலைப் புலிகளிடம் இந்த வகையான விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதாக ஏற்கனவே இலங்கை இராணுவம் தெரிவித்தது என்றும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். (த-04)

## மல்லாகத்தில் இன்று பேரணி

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியேற்றக்கோரி இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. மல்லாகம் சந்தியிலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள இப்பேரணி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

அங்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்படும். இதற்கான ஏற்பாட்டை வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன. (ச)

## வெலிக்கந்தையில் நேற்று இளைஞர் சுட்டுக் கொலை

(பொலநறுவை)

பொலநறுவை வெலிக்கந்தையில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மனோராஜ் என்பவரே சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தீவுச்சேனையில் இருந்து புறப்பட்ட அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுக்காலை வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரே சடலத்தைக் கண்டெடுத்தனர். பிரஸ்தாப நபர் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவொன்றைச் சேர்ந்தவரெனக் கருதப்படுகிறது. (த)

## புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு எதிரான மனுக்களில் ஒன்று வாபஸ்

போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்ய வேண்டும் எனக்கோரி தாக்கல்செய்யப்பட்ட மனு ஒன்று திரும்பப் பெறப்பட்டுள்ளது.

சிஹல உறுமயக் கட்சியின் தலைவராக இருந்தபோது மேற்படி மனுவைத் தாக்கல்செய்த திலக் கருணாரட்ணவே நேற்று அதனைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

அவர் தற்சமயம் ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்(14 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் நாளை ஆரம்பம்

தியாகதீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவுதினம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளைமுதல் அடுத்த மாதம் 19 ஆம் திகதிவரையான நாட்களில் சிரமதானங்கள், கருத்தரங்குகள் மற்றும் உண்ணாவிரதக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

இறுதி மூன்று நாட்களிலும் தமிழர் தாயகப்பிரதேசங்களில் காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும். இறுதிநாளான 19 ஆம் திகதி அன்று மாலை உண்ணாவிரதம் நிறைவுபெற்றதும் நினைவுக் கூட்டங்கள் இடம்பெறும். (ச-8)

## பொதுக் கட்டமைப்பில் இணக்கம் காண்பதில் முன்னேற்றம்: லக்ஷ்மன்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுககுமிடையில் பொதுக் கட்டமைப்பினை உருவாக்கும் வேலைகள் - பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் சற்றுக்காலம் பொறுத்திருக்கவேண்டியிருக்கும். அது அதிக காலமாக இருக்காது. எப்போது இது சாத்தியமாகும் என்று காலவரையறை அல்லது ஒரு திகதியினை குறிப்பிடமுடியாது என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

லண்டன் சென்றுள்ள கதிர்காமர் பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் இனி எத்தருணத்திலும் நோர்வே அரசாங்கம் முன்வைத்துள்ள இத்திட்டத்திற்கு பதிலளிக்கக்கூடும்.

தான் தற்போது இலங்கையைவிட்டு வந்து ஒருவார காலமாகிவிட்டது. இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டன. தாமதங்கள் எதுவும் கிடையாது. இது எப்பொழுது கையெழுத்தாகும் என்று சொல்லமுடியாது. இது குறித்த விபரங்களை தற்போது கூறமுடியாது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென நிவாரணமாக வந்த பொருட்களில் பல தேவையற்றவை அல்லது பயனற்றவை. ஒரு பெட்டி முழுவதும் கரடிப் பொம்மைகளாக வந்தன. எனவே இது தொடர்பில் என்ன முடிபு செய்திருக்கிறோம் என்றால் எதிர்வரும் ஏப்ரல் 26 ஆம் திகதிவரை வெளிநாடுகளில் இருந்து வரும் எல்லாப் பொருட்களுக்கும் சுங்க வரி விலக்கு அனுமதிக்கப்படும்.

ஆனால் ஏப்ரல் 26 ஆம் திகதிக்குப் பிறகு ஒருவேண்டாத பொருட்கள் குறித்த எதிர்மறைப் பட்டியலை உருவாக்கப் போகின்றோம் எனத் தெரிவித்தார். (த-4)

## சர்வஜன வாக்கெடுப்பென்று சதி செய்கின்றார் சந்திரிகா

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தொளாயிரம் மில்லியன் ரூபாவைச் செலவிட்டு சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் சதி முயற்சியானது செயற்பாட்டு ரீதியாக பலமற்றது எனவும், சந்தர்ப்ப அரசியலை நோக்காகக் கொண்டது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவைக்குறைப்பது மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது ஆகிய செயற்பாடுகளை அரசாங்கம் மறந்த நிலையிலுள்ளது.

நாட்டின் அனைத்து இடங்களிலும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அத்துடன் எந்தப் பல்கலைக் கழகங்களும் இயங்கவில்லை. இவ்வாறான நிலையில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் என்ன பலன் கிடைக்கப்போகின்றது என அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்த்தரப்பு சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்துவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதில் அரசாங்கம் எல்லைமீறிச் செயற்படுகிறது. இது ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கை.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கிப் பிரதிநிதி மீது விசாரணைக்கு ஏற்பாடு

வடக்குக் கிழக்குக் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் பிலிப்பைன்ஸுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் உள்ள ஆசியப் பிராந்தியத்தில் உள்ள உலக வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் உலக வங்கியின் உயர் அதிகாரிகளுடன் பீற்றர் ஹரோல்ட் சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

இச் சந்திப்பின்போது வடக்குக் கிழக்கு குறித்து அவர் வெளியிட்ட கருத்துக் குறித்து அங்கு விளக்கமளிக்கவேண்டி ஏற்படுலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
யாழ்  கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
*Your friend in the skies...* E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...

## வடக்கின் மாபெரும் போர்

# முதல் நாள் ஆட்டத்தின்போது சென். ஜோன்ஸ் கல்லூரி 217/9

'வடக்கின் மாபெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் றொகான் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 90 ஓவர்களை எதிர்கொண்டு 9 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக தினேஸ் 18 ஓட்டங்களையும், நவகீதன் 17 ஓட்டங்களையும், சகிந்தன் 15 ஓட்டங்களையும், மயூரதன், கஜரூபன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 98, 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆரம்பத்தில் 137 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை, 10 ஆவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கஜரூபன், மயூரதன் ஆகிய இருவரும் இணைந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இவர்கள் இருவரும் இணை ஓட்டமாக 80 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். ஆட்டநேர முடிவில் மயூரதன் 98 ஓட்டங்களையும், கஜரூபன் 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

நேற்றைய ஆட்டத்தில் மத்திய கல்லூரி அணியின் சார்பாக பந்துவீச்சில் தயான் 4 விக்கெட்டுக்களையும், மதுப்பிரியன் 2 விக்கெட்டுக்களையும் வியாசன், மயூரன், ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (ச-4)

# ஒருநாள் இறுதிப் போட்டியைக்காண முஷாரப் இந்தியா செல்லவுள்ளார்

இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரின் கடைசி ஒருநாள் போட்டியைக் காண பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் இந்தியாவுக்கு செல்லவுள்ளார். இப்போட்டி டெல்கியில் ஏப்ரல் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.


கிரிக்கெட் தொடரை பார்வையிடச் செல்லும் முஷாரப் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கையும் சந்தித்துப் பேசவுள்ளார். தனது இந்திய விஜயம் குறித்து முஷாரப் தெரிவிக்கையில்,

இந்தியாவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியைக் காண்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ் விடயத்தில் இந்திய அரசு ஆர்வமாக உள்ளது. கிரிக்கெட் போட்டியைக் காண வேண்டும் என்பதைவிட இந்தியத் தலைவர்களை சந்திக்க வேண்டும் என்பதில் மிகவும் முனைப்புடன் இருக்கிறேன். இந்த சந்திப்பு இருதரப்பு உறவுக்கு மேலும் வலுக்கூட்டும் என்று நம்புகிறேன் என்றார்.

இதேவேளை பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பின் தாய், ஜரீன் மற்றும் மகன் பிலால் மூத்த சகோதரர் ஜாவித் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். (ச-4)

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வலுவான நிலையில் பாகிஸ்தான்

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் ஈடன்காடன் மைதானத்தில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை 407 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்த பாகிஸ்தான் அணி யூனிஸ் கான், யூசுப் ஜுகானா ஆகியோரின் சதத்தினால் வலுவான நிலையில் உள்ளது.



இரண்டாவது நாளான நேற்று ஆட்டநேர முடிவின்போது பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

6 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் களமிறங்கிய இந்திய அணி நேற்று காலை தினேஸ் கார்த்திக்கை ஆட்டத்தின் மூன்றாவது ஓவரிலேயே இழந்தது.

பாலாஜியும், பதானும் நீண்ட நேரம் களத்தில் நிற்கவில்லை. அடுத்தடுத்து பாலாஜி 3 ஓட்டங்களுடன் பதான் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஹர்பஜன்சிங் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 4 பவுண்டறிகளுடன் 27 ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் அவருக்கு உறுதுணையான நின்றாடிய அனில் கும்ளே 36 பந்துகளில் 4 பவுண்டறிகளுடன் 21 ஓட்டங்களை எடுத்தார். இவர்கள் இருவரும் இறுதி விக்கெட்டுக்களுக்காக எடுத்த 44 ஓட்டங்களின் உதவியால் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 407 ஆக உயர்ந்தது.

பந்துவீச்சில் டினேஸ் கனேரியா, அப்துல் ரஷாக், சாஹிட் அப்ரிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். அதனைத் தொடர்ந்து முதலாவது இனிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணியின் ஆரம்பம் சற்று தடுமாற்றமாகவே இருந்தது.



ஒரு பக்கத்தில் சாஹிட் அப்ரிடி ஓட்டங்களைக் குவிக்க மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த ரபிக் உமர் திணறிக்கொண்டிருந்தார்.

. பாலாஜியின் பந்துவீச்சில் இருமுறை ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து தப்பினார். ஒருமுறை ட்டிராவிட்டும் பின்னர் செவாக்கும் வாய்ப்புக்களை கைவிட்டனர்.

அதன்பிறகு பாலாஜியின் 7 ஆவது ஓவரிலேயே 18 ஓட்டங்களுடன் ரபிக் உமர் ஆட்டம் இழந்தார்.



மறுமுனையில் நின்ற சாஹிட் அப்ரிடி மளமளவென்று 7 பவுண்டறிகளை அடித்து ஓட்டங்களைக் குவித்தார். பதானின் ஒரு ஓவரில் 3 பவுண்டறிகளை விளாசிய அப்ரிடி கடைசிப் பந்தை மிட் விக்கெட்டின் மீது தூக்கி அடிக்க சச்சினிடம் பிடிகொடுத்து 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 70 ஆக இருந்தது.

இணை சேர்ந்த யூனிஸ்கானும், ஜுகானாவும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். இவர்கள் இருவரும் 203 ஓட்டங்களை இணைப்பாட்டமாக குவித்தனர்.

ஆட்டமுடிவின்போது யூனிஸ் கான் 167 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டறிகளுடன் 108 ஓட்டங்களையும், ஜுகானா 172 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டறிகளுடன் 101 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். (ச-4)

# சிம்பாப்வே அணியின் நிறவெறிக்குத் தீர்வு

சிம்பாப்வே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் சிம்பாப்வே அணியில் அங்கம் வகித்த வெள்ளை இன வீரர்களுக்கும் இடையில் நிலவி வந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஒருவருட கால ஒப்பந்தம் ஒன்றில் இரு சாராரும் கைச்சாத்திட முன்வந்துள்ளனர்.

சிம்பாப்வே அரசும் சிம்பாப்வே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் நிறவெறி கொள்கையில் இருந்து விட்டுக் கொடுப்புக்களை செய்யாததையடுத்து வீரர்கள் தங்கள் கொள்கைகளிலிருந்து விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து நிறவெறிக்கான தீர்வு கிட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை தென்னாபிரிக்க அணிக்கெதிராக நடைபெறவுள்ள தொடரில் சிம்பாப்வே அணியிலிருந்து விலக்கியிருந்த வெள்ளை இன வீரர்கள் சேர்க்கப்படவுள்ளனர். (ச-4)

# நான் 10 ஆயிரம் ஓட்டங்களை குவித்ததை ட்ராவிட் மூலமே தெரிந்து கொண்டேன்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 5 ஆவது வீரர் என்ற பெருமையை இந்திய துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே அவர் இதனைப் பெற்றார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக 1989 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த தனக்கு அதே அணியுடனான போட்டியில் இந்த சாதனையை எட்டியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக சச்சின் தெரிவித்தார்.



இந்தியாவில் இருந்து இச் சாதனையை பெற்றிருக்கும் கவாஸ்கரும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியிலேயே 10 ஆயிரம் ஓட்டத்தை கடந்தார் என்றார். அவர் மேலும் கூறுகையில்,

"ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் நான் 10 ஆயிரத்துக்கு அதிகமான ஓட்டங்கள் எடுத்துள்ளேன். ஆனால் அதைவிட டெஸ்ட் போட்டியில் எடுத்துள்ள இச் சாதனை தான் எனக்கு பெரிதாக தெரிகிறது. கவாஸ்கரின் 34 டெஸ்ட் சத சாதனையை முறியடிக்க முடியவில்லை என்ற வருத்தம் எனக்குக் கிடையாது.

இன்னும் நிறைய போட்டிகள் எனக்கு உள்ளன எனவே இப்போதைய சாதனை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. நான் 10 ஆயிரம் ஓட்டம் கடந்ததும் ரசிகர்கள் அளவுக்கு அதிகமாக சத்தம் போட்டனர். முதலில் எனக்கு எதுவும் தெரியவில்லை.

எதிர்முனையில் ஆடிக்கொண்டிருந்த ட்டிராவிட்டிடம் இதுபற்றி கேட்டேன். அவர் நானும் இதை சொல்ல வேண்டுமா? என்று கேட்டார். அப்போதுதான் எனக்கு நான் 10 ஆயிரம் ஓட்டங்கள் கடந்திருப்பது தெரிய வந்தது. உடனடியாக ரசிகர்களுக்கு நான் எனது துடுப்பை உயர்த்திக்காட்டி அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். என்னுடைய ஆட்டம் இத்தோடு முடிந்துவிடாது. இது தொடர்ச்சியானது" என சச்சின் டெண்டுல்கர் மேலும் கூறியுள்ளார். (ச)

# இரண்டாவது டெஸ்ட்டில் வாய்ப்பில்லை பிரெட்லீ அவுஸ்திரேலியா திரும்புகிறார்

அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடவிருக்கின்ற வீரர்களின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய அணியே இந்தப் போட்டியிலும் விளையாடவுள்ளது.

இவ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று நியூசிலாந்து வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது. இப் போட்டியில் விளையாடவிருக்கின்ற அவுஸ்திரேலிய அணியின் 12 ஆவது வீரர் யார் என்பது குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை.

கடந்த போட்டியில் 12 ஆவது வீரராகவிருந்த வேகப் பந்துவீச்சாளர் பிரெட்லீ இப் போட்டியிலும் 12 ஆவது வீரராகக் தெரிவானால் தாம் அவுஸ்திரேலியாவுக்கு திரும்பிப்போவதாக அறிவித்திருந்தார்.

அதன்படி நியூசிலாந்திலுள்ள பிரெட்லீ அவுஸ்திரேலியா செல்வது உறுதியாகிவிட்டது. அவுஸ்திரேலிய செல்லும் பிரெட்லீ பிராந்தியப் போட்டிகளில் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# "மத்தியம் 2004" இன்று வெளியீடு

"மத்தியம் 2004" நூறாவது ஆண்டு பெருந் துடுப்பாட்டச் சிறப்பு மலர் இன்று காலை 8.30 மணிக்கு மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பரியோவான் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்க லண்டன் கிளைத் தலைவர் ஆர். இராஜசிங்கம், கொழும்புக் கிளைச் சங்க முன்னாள் செயலாளர் வ. நடராஜா, யாழ். சங்கச் செயலாளர் என். இராஜதேவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்.(ச-8)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். (ற-19)

சுனாமி நிதிஉதவியாக ஐந்து சதமேனும் கிடைக்கவில்லை

# ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றை ஏற்க மறுக்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

சுனாமி கடல்பேரலை அனர்த்தத்தின் பின்னர் நாட்டினை மீளக் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச சமூகத்திடமிருந்து நிதியுதவிகள் எதுவும கிடைக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ள கருத்தானது ஆச்சரியத்தை உண்டுபண்ணுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கருத்தினை இட்டு நாம் கவலையடைகின்றோம் 5 சத மேனும் நிதியுதவி கிடைக்கவில்லை என அவர் தெரிவிக்கின்றார். ஆனால் கடந்தவாரம் பாராளுமனற உயர்மட்டக்குழுவொன்றின் முன் தோன்றிய திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜெயசுந்தர, நாம்கேட்ட கேள்விகளுக்கு எவ்வளவு சர்வதேச நிதியுதவிகள் இலஙகைக்குக் கிடைத்துள்ளது என்பதனை மிகவும் தெளிவான முறையில் விபரித்தார்.

இதற்கமைய 700 மில்லியன் அமெரிகக டொலர்களுக்கும் அதிகமான நிதி இலங்கைக்குக் கிடைத்துளளது. இவை உறுதிமொழிகள் அல்ல. உண்மையில் இவ்வளவு நிதியுதவி கிடைத்துள்ளது.

மதிப்பிற்குரியவரான ஜனாதிபதி இவ்வாறான பொறுப்பற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதை விடுத்து கிடைத்துள்ள நிதியுதவிகள் மூலம எவ்வாறு பயனடையலாம் என்பது குறித்தும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கு நிதியுதவிகளை எவ்வாறு வழங்கலாம் என்பதுகுறித்தும் சிந்திப்பதே பொருத்தமானது என தமது கட்சி கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)



# சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுகாதார சேவையில் கடந்த 7 வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்காத ஊழியர்களுக்கு நியமனம் வழங்கக்கோரி நேற்று முன்தினம் அமைச்சின்முன் அகில இலங்கை சுகாதார சேவை சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டு அமைச்சு நிரந்தர நியமனம் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது சுகாதார சேவையில் கடமையாற்றும் ஆயிரத்து 1664 சமயாசமய ஒப்பந்த ஊழியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது சுகாதார சேவையில் கடமையாற்றும் ஆயிரத்து 664 சமயாசமய ஒப்பந்த ஊழியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கக்கோரி அந்த ஊழியர்கள் கைச்சாத்திட்ட மகஜரும் நேற்று முன்தினம் அமைச்சில் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.

அமைச்சே உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கும் "ஊழியர்கள் உரிமையைப் பறிக்காதே எங்களுக்கு நீதியை வழங்கு" ஆகிய சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயிரத்து 664 சமயாசமய ஒப்பந்த ஊழியர்கள் கடந்த 7வருடங்களாக நிரந்தர நியமனத்திற்காகப் போராடி வருகின்றனர்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தினால் நாம் ஏமாற்றப்பட்டோம். எனவே இந்த அரசாங்கத்திடம் நாம் நீதியை எதிர்பார்க்கிறோம்.

எமது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காவிடின் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சங்கததின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(க-9)

'சுனாமி' நிவாரண நடவடிக்கைகளுக்கென

# 5 மில்லியன் அமெ. டொலர் நிதியை இலங்கைக்கு வழங்கியது சவுதி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கென சவுதி அரச குடும்பத்தினர் நிதிஉதவிகளை வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் இலங்கை வந்த சவுதி இளவரசர் அல் ஆதர் அப்துல் அஸிர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இந்த நிதிஉதவிகளை வழங்கியுள்ளார்.

வழங்கப்பட்ட ஐந்து மில்லியன் அமெரிக்கடொலருக்கும் அதிகமான தொகையை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

பின்னர் சவுதி இளவரசர் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மேலும் சவுதி இளவரசர், பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவையும் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

குறுகியகால விஜயத்தை மேற்கொண்டு இலங்கைவந்த அவர் நேற்று முன்தினம் நண்பகல் அளவில் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

(ற-8)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00மணிக்கு உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன் தலைமையில் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற)

# பொதுக்கட்டமைப்புக்குப் பதிலாக சார்க் பிராந்திய பிரதிநிதிகள் குழு

அமைக்கப்படவேண்டும் என்கிறது ஹெலஉறுமய

சுனாமி நிவாரணப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதில் புலிகளுடன் அரசாங்கம் ஓர இணக்கப்பாட்டுக்கு வருமானால் அரசாங்கத்துக்கான ஆதரவை முற்றாக விலக்கிக் கொள்வதுடன், பாராளுமன்றத்துக்குள்ளும் நாடளாவிய ரீதியிலும் கடும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் விடயத்தை அரசாங்கம் கைவிட்டு, சார்க் பிராந்திய பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்து வடக்கு, கிழக்கு சுனாமி நிவாரணப் பணிகளை முன்னெடுக்க வேணடும் என்றும் ஹெல உறுமய அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும பொருட்டு அரசுபுலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை அமைக்க வேண்டியதன் அவசியம் என்ன? வடக்கு, கிழக்கில் 69 சதவீதமான பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது.

மிகுதி 31 சதவீதம் மட்டுமே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

எனவே, புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, பிரதேச நிவாரணப் பணிகளை மேற்கொள்வது, புலிகளையும் அவரகளின் கைப்பொம்மைகளான தமிழர புனர்வாழ்வுக் கழகத்தையும் பலப்படுத்த மட்டுமே உதவும் என்றும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

இந்த முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும். சார்க் பிராந்திய பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவினால் இந்த பணியை சரிவர மேற்கொள்ள முடியும். நிவாரணப் பணிகளை கண்காணிப்புக் குழு முன்னெடுப்பதற்கு முன்னர், வடக்கு, கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான உண்மையான விபரங்களை இந்த குழு சேகரிக்க வேண்டும்.

புலிகளின் தகவல்களை முழுமையாக அரசாங்கம் நம்பிவிடக் கூடாது என்றும் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

மேலும் இவ்விடயம் தொடர்பாக அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வில் குரல் கொடுக்க ஹெல உறுமய எம்.பி.க்கள் தீர்மானித்துள்ளனர். (க)

## பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்படும் வயலின், மிருதங்க வகுப்புகளின் ஆரம்ப நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ப-9)

வட-கிழக்கு பாடசாலைகளிடையேயான

# "சுனாமி" ஓவியக் கண்காட்சிப் போட்டியில் யாழ். வலய 3 பாடசாலைகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையே வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட சுனாமி ஓவியக்கண்காட்சிக்கான ஓவியப் போட்டியில் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த 3 பாடசாலைகள் வெற்றிபெற்றுள்ளன.

பிரிவு-II ற்குரிய போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் பி.திருக்குமரன் (ரூ.3000) ஆறுதல் பரிசைப் பெற்றுள்ள அதே நேரம் பிரிவு-II இல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் ரி.தஜேந்திரன் மற்றும் பிரிவு-I இல் திருக்குடும்பக் கன்னியர் மடம் வித்தியாலய மாணவி எஸ்.பிரியங்கா ஆகியோர் விஷேட பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் நாளை சனிக்கிழமை மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியில் நடைபெறும் ஓவியக் கண்காட்சி நிகழ்வில் வைத்து வழங்கப்படுமென மாகாணக கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் அறிவித்துள்ளார். (ற)

## சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட பிரதான பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் முதியோாகளுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்படாததால் முதியோர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (ற)





ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பிரிவு நாடகக் கலைஞர்கள் வழங்கவுள்ள நாடகங்களின் ஒருசில காட்சிகள்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 44



அங்கிருந்து 14மைல் சென்று மலைமேலுள்ள ஏகலிங்கஜீ என்ற சிவாலயத்தைக்கண்டு வழிபட்டோம். இங்கு அர்ச்சகர் முதலிய அனைவர்களும் வாயைத் துண்டினால் கட்டிக்கொண்டு பயபக்தியுடன் பூசை செய்கிறார்கள்.

பின்னர் நாதத்வராம் சென்று கண்ணபிரானை வணங்கினோம். இக்கோயில் சிற்பங்கள் சிறந்து விளங்குகின்றது. இங்கு சுவாமிக்குக் குங்குமப்பூவை தங்கத்திரிகையும், வெள்ளித்திரிகையும் வைத்து அரைத்துக்கொண்டிருக்கக் கண்டு அதிசயம் அடைந்தோம்.

அஜ்மீர், ஜெய்பூர், ஆக்ரா, மதுரா, கோகுலம், கோவர்தனம் ப்ருந்தாவனம் முதலிய தலங்களைத் தரிசித்துவிட்டு டெல்லியை அடைந்தோம். பின்னர் காஷ்மீரை அடைந்து காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகர் சென்றோம். கீர்பவாளி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஜ்வாலாமுகி என்ற திருத்தலத்தை அடைந்தோம்.

### *ஜ்வாலாமுகி*

பதான் கோட்டிலிருந்து 76 மைல்கள். வழி நெடுக மலைத் தொடர்கள். ஜ்வாலாமுகி கோயில் பாண்டவர்கள் திருப்பணி செய்தது. இங்கு நந்தி வாயில் நீர்வந்து விழுந்த வண்ணமாக இருக்கின்றது. கோயிலுக்குள் பல இடங்களில் கட்டை, கரி, எண்ணெய் ஒன்றும் இன்றி இயற்கையாக அக்னி ஜ்வாலைவிட்டு எரிந்த வண்ணம் இருக்கிறது. கோவிலுக்கு மேற்புறம் கோரக்கசித்தர் தவம்செய்த இடம் இருக்கிறது. ஒரு சிறு சுரங்கத்தில் தண்ணீர் கொப்பளித்துக்கொண்டு வருகின்றது. தங்கத் தூபியுடன் சலவைக் கல்லால் சமைந்த இக்கோயிலில் நெடுநேரம் இருந்து மகிழ்ச்சியுற்றோம்.

அங்கிருந்து ஹரித்வாரம் போய், ரிஷிகேசம் சென்று ஆனந்தகுடீரை அடைந்தோம். ரிஷிகேசத்தில் கேதாரம் போவதற்கு உதவியாக மழைக்கோட்டு, காலுக்குப் பாதுகைகள், இரும்புக்கூருடன் கூடிய கம்புகள் முதலியன வாங்கிக்கொண்டு சிவாநந்த நகரில் தவமுனிவராகிய சிவாநந்த சுவாமிகளைச் சந்தித்தோம். அவருடைய விருப்பத்தின்படி "குருவருள்" என்பது பற்றி 11/2மணி நேரம் வரிவுரை செய்தேன்.

இத்துடன் இணைத்துள்ளவாறு ஒரு பத்திரம் தந்து பாராட்டி, "சுகமே கேதாரம் போய் வாருங்கள்" என்று வாழ்த்தி அனுப்பினார்கள். சுவாமிகளின் அருளும், அன்பும் கங்காநதி போல் பெருக்கெடுத்து ஓடின. பால் கொடுங்கள், பழம் கொடுங்கள் என்று பன்முறை பகர்ந்தார்கள்.

ஆனந்த குடீரை விட்டு கேதாரம் நோக்கி 15.9.61இல் புறப்பட்டோம். அன்று சஷ்டி. அடியேன் உபவாசம். சென்னையிலிருந்து புறப்பட்ட நாளும் சஷ்டி.

கங்காநதி ஓரமாக ஏற்றமும், இறக்கமும் கூடிய மிக்க அபாயமான வழியில் 66மைல் பஸ்ஸில் பிரயாணம் செய்து ஸ்ரீநகரை அடைந்தோம். வழியில் தேவப் பிரயாகையில் பாகீரதி என்ற கங்கையுடன் அளகாநந்தி என்ற நதி கூடுகின்றது. ஸ்ரீநகரிலிருந்து 21 மைல் கடந்து உருத்திரப்ரயாகையை அடைந்தோம். வழியில் மழைபெய்து மண்ல் சரிந்து பஸ்ஓட முடியாமல் நின்றுவிட்டது. இரண்டு மைல் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு நடந்தோம்.

### *உருத்திரப்ரயாகை*

உருத்திரப்ரயாகையில் அளகாநந்தியும், மந்தாகினி என்ற நதியும் கூடுகின்றது. அளகாநந்தி ஒரு சிறந்த வீரனைப்போல் வேகமாக ஓடுகின்றது. மந்தாகினி நதி ஒரு கற்புடைய மங்கையைப் போல் அமைதியாகச் செல்லுகின்றது, வளைந்து வளைந்து ஏறி இறங்கும் வழியில் 87 மைல் மலைமீது பஸ்ஸில் வந்ததனால் களைப்பும், உபவாசத்தால் இளைப்பும் என்னை வருத்தின. இரு நதிகளும் கூடும் இடத்தில் ஸ்ந்தியாவந்தனம் செய்துவிட்டு தருமசத்திரத்தில் படுத்தோம்.

### *உதிர தானம்*

காலா கம்பளவாலா கட்டிய சத்திரத்தில் ஆயிரக்கணக்கான மூட்டைப்பூச்சிகள் பொழுது விடிகின்றவரை இமைகூடக் கொட்டவிடாமல் எங்களைக் கடித்து உபசரித்தன. நாங்கள் அவைகளுக்கு உதிர தானம் புரிந்தோம். அன்றிரவு நாங்கள் சிறிதும் உறங்காமல் துன்பத்தை நுகர்ந்தோம். நித்திராதேவி நெடுந்தூரத்தில் நின்று எங்களை வணங்கிக்கொண்டிருந்தாள்.

16.9.61 அதிகாலையில் எழுந்து சங்கமத்தில் நீராடி, மந்தாகினி நதிக்கரையில் முருகனை வைத்து வழிபாடு செய்தேன்.

"மந்தாகினி தந்த வரோதயனே" என்கிறார் அருணகிரி நாதர்.

சுமார் 150படிகளுடன் கூடிய ஒரு சிறு குன்றின் மீதுள்ள சிறு ஆலயத்தில் விளங்கும் சிவமூர்த்தியை வழிபட்டோம். இந்த மூர்த்தியை வழிபட்டு நாரதர் இசைஞானத்தைப் பெற்றார்.

நாங்கள் பஸ்ஏறி பத்துமைல் கடந்து அகத்தியமுனி சட்டி என்ற இடத்தில் அகத்தியமுனிவரை வணங்கினோம். மீளவும் பஸ் ஏறி 3மைல் வந்து சௌரி என்ற இடத்தை அடைந்தோம். மழைக்கொடுமையால் வழிகள் பழுதுபட்டு மேற்கொண்டு 12மைல் போகக் கூடிய பஸ்போக முடியாமல் நிறுத்தப்பட்டது.

நாங்கள் இடர்பாடு நிறைந்த வழியில் படாதபாடு பட்டு 11மைல் நடந்து மாலை 61/2மணிக்கு குப்தகாசி வந்து அடைந்தோம்.

### *குப்தகாசி*

குப்தம் என்றால் ரகசியம். காசி என்றால் ஒளி மயமானது. ரகசியம் பல நிறைந்த தலம் குப்தகாசி. இங்கு விஸ்வநாதன் ஆலயம் இருக்கின்றது. ஆலயத்திற்குள் கங்கை, யமுனை என்ற இரு நதிகளின் தீர்த்தம் இரு புறங்களிலும் வந்து விழுகின்றன. அங்குள்ள தீர்த்தத் தொட்டியில் நீராடி, சுயம்பு லிங்கமாகிய விஸ்வநாதரை வழிபாடு செய்தோம்.

குண்டுச் சட்டியிலிருந்து குப்தகாசி 2மைல் மலைமீது கடுமையான ஏற்றம். நாங்கள் துன்பத்தின் சுவையை நன்கு நுகர்ந்துகொண்டு நடந்தோம். குப்தகாசி கடல் மட்டத்திற்கு மூவாயிரம் அடி உயரம்.

17.9.61 அதிகாவையில் எழுந்து புறப்பட்டோம். வெய்யில் எங்களை வாட்டியது. பகல் 12மணிக்கு பாட்டாசட்டி என்ற இடத்தை அடைந்தோம். அங்கு மலையின் இடையில் ஜமதக்கினி முனிவர் தவம் செய்து சிவபெருமானுடைய அருளைப்பெற்றனர். ஜமதக்னீச்வரர் கோயில் மலை மீதுள்ளது. ரேணுகா நதி ஓடுகிறது. அதில் சுகமாகநீராடி வழிபாடுசெய்தேன். மாலை 3மணிக்குத்தான் அன்று எனக்கு முதல் உணவு. நான் வழிபாடு செய்யாமல் தண்ணீரும் பருகுவதில்லை.

என் உடன்வந்த ஒருவரை "தம்பி! நீ எத்தனை முறை இன்று ஆகாரம் செய்தாய், என்று கேட்டேன். அவர் அதிகாலையில் ஒரு டீ, 7மணிக்குப் பழையசோறு, 9மணிக்குப் பொரிமா, 11மணிக்கு ஒரு டீ என்றார். அப்பொழுது திருப்பள்ளியெழுச்சி, உஷத் காலை, காலை சந்தி விளாப்பூசை என்று கோயிலில் நிகழும் பூஜைகள் கவனத்துக்கு வந்தன.

மறுபடியும் 4.15க்குப் புறப்பட்டோம். 5மைல் நடந்து இரவு 7-50 ராம்பூர் என்ற இடத்துக்கு வந்தோம். குப்தகாவியிலிருந்து ராம்பூர் 12மைல் நாங்கள் கால் வருந்த நடந்து காலாகம்பளவாலா தருமசாலையை அடைந்தோம். ராம்பூர் 4500அடி உயரம். இடையில் காளிநதி வந்து மந்தாகினியுடன் கூடுகின்றது.

(தொடரும்)

## வடகிழக்கு மாகாண அரச சேவையில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள்

ஆளணி, நிதி தொழில்நுட்பம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், பொது அபிவிருத்தி, நிலப் பயன்பாடு, உள்ளூராட்சி, பொது சனத் தொடர்பு, சட்டம் மனோதத்துவம், சுற்றுச்சூழல், கல்வி, புள்ளிவிபரம், மொழிபெயர்ப்பு, மீன்பிடி, சுகாதராமும் போஷாக்கும் மகளிரும் சிறுவர்களும் சுதேச வைத்தியம் ஆகிய துறைகளுக்கான திட்டஉதவியாளர் பதவிகளுக்கான விணணப்பங்கள் தொழிலற்ற, தொழிலிலுள்ள பட்டதாரிகளிடமிருந்து வடகிழக்கு மாகாண சபையினது மாகாண அரசாங்க சேவைக்குக் கோரப்பட்டுள்ளன.

வடகிழக்கு மாகாணஙகளை வதிவிடமாகக்கொண்ட பட்டதாரிகளைக்கொண்டு வடகிழக்கு மாகாண சபைகளிலுமுள்ள மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தறபோது பயிற்சியில் சேர்த்துக்கொள்ளபபட்ட பட்டதாரிப் பயிலுநர்களும இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிகள் நிரந்தரமாணவையும் பங்களிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியததின் கீழ் பங்களிக்கப்பட்ட ஓய்வூதியத்துக்கு உரிமையுடையனவுமாகும்.

தெரிவுசெயயப்படுபவர்கள வடகிழக்கு மாகாண நிர்வாகத்தின் தீர்மானத்துக்கமைய வடகிழக்கில எந்தப் பகுதியிலும் குறைந்த பட்சம் 5வருடங்களுக்கு கடமையாற்றத் தயாராக இருக்கவேண்டும். (து)

## விமானநிலைய தாக்குதல் வழக்கு

## ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும்

2001ஆம் ஆண்டு ஜுலைமாதம் 24ஆம் திகதி கட்டுநாயக்க இராணுவ விமானத்தளம் தாக்கப்பட்டு நாற்பது விமானங்களும், ஹெலிகப்டாகளும், சிறுரக விமானங்களும சேதமாக்கி அழிக்கப்பட்ட வழக்கு விசாரண கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் ஐ.எம். அபேரத்ன வரும் ஏபரல் 26ஆம் திகதி நடைபெறுமென அறிவித்துள்ளார்.

இரத்தினசிங்கம் புஷ்பகுமாரன் எனப்படும் பொன்னுத்துரை நிர்மலராஜன் எனப்படும் மன்சூர், விக்ரர் அல்பிரட் டொமினிக், சுப்பிரமணியம் நவராஜசிங்கம் தனபாலசிங்கம், ஜெயலஷ்மி ஆகியோர் இவ்வழக்கில் 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி முதல் 2001ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி கிடைக்கப் பட்ட காலத்தில் கட்டுநாயக்கா இராணுவ விமானத்தளத்திலுள்ள யுத்த விமானங்களை அழிப்பது குறித்துச் சதிசெய்ததாக அவர்கள்மீது 311குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன.

ஏழு இராணுவ வீரர்களின் மரணத்துக்கும் மற்றும் 14இராணுவ வீரர்கள காயமடைவதற்கும் இவர்கள் உடநதையாக இருந்ததாகவும் இவர்கள்மீது குற்றச்சாட்டுப் பதிவாகியுள்ளது.

குற்றபபத்திரிகையின் பிரகாரம் இரண்டு கிபீர் விமானங்களும், ஒரு எம்.ஐ.ஜீ.விமானமும், மூன்று கே-8 விமானமும், இரண்டு எம்.ஐ 17 ஹெலிகப்டர்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான எட்டு பெல் ஹெலிகப்டர்கள், நாலு எம்ஐஹெலிகப்டர்கள், ஆறு கிபீர் தாக்குதல் விமானங்கள், மூன்று எம்.ஐ.ஜீ. தாக்குதல் விமானங்கள், மூன்று எல்.ரி.விமானங்கள் முதலியவற்றையும் ஸ்ரீலங்கா விமான சேவைக்குச் சொந்தமான ஆறு விமானங்களுக்கும் சேதம் விளைவிக்க உடந்தையாக இருந்ததாகவும் அவர்கள மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட 244தடையப் பொருட்களில் எட்டு T56 ஆயுதங்கள், மூன்று ஜி.பி.எம்.ஜி.ஆயுதங்கள், இரண்டு ஆர்பிஜி, ஒரு சினைப்பர், ஓசையின்றிச்சுடும் ஆயுதங்கள், இரண்டு பிஸ்டல்கள் அடங்கும். 415சாட்சியங்கள் விசாரிக்கப்படவுள்ளனர். (து)

## மகன்களைக் காணவில்லை

## ம.உ.ஆணைக்குழுவில் தாய்மார் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தனது மகனை மூன்றுமாத காலமாகக் காணவில்லையென தாய் ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.கடந்த செவ்வாய்க்கிழமை செய்யப்பட்ட இம்முறைப்பாட்டில்,

உரும்பிராயைச்சேர்ந்த பத்மநாதன் மயூரன் (வயது 18)என்ற தனது மகனை கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் திகதியிலிருந்து காணவில்லையென அவரது தயார் கேமலதா தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரக்காறோட், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மதியழகன் ரவி (வயது 13) என்ற தனது மகனை கடந்த முதலாம் திகதியிலிருந்து காணவில்லையென மற்றுமொரு தாயாரும் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ரு-19)

### "என் நெருக்கடி வேளையில் ஆண்டவரை மன்றாடினேன். அவர் என் குரலைக் கேட்டார்"



பேராயர் புல்டன்ஷீன் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் திவ்விய நற்கருணை ஆராதனை செய்வாரம். அன்னைத் தெரேசாவிடம்.

"இத்தனை காரியங்களைச் செய்ய உங்களுக்கு சகதி எங்கிருந்து கிடைகின்றது" என்றபோது, அவர் சொன்னதென்ன? "இங்கிருந்து" என்று திவ்விய நற்கருணைப் பெட்டியைச் சுட்டிக் காட்டு கின்றார்.

**தவக்காலச் சிந்தனை**

மாவீரன் நெப்போலியனின் போர்வீர ஒருவன் எதிரிகளால் படிபடுகின்றான். அவன் என்ன சொல்கிறான் தெரியுமா? என் இதயத்தைக் குத்தித் திறந்து பாருங்கள். "அங்கும் நெப்போலியன் இருப்பான்" என்று. எரெமி அதைத்தான சொல்கிறார். ஆண்டவர் எல்ல நொடிபொழுதும் நம்மோடு இருக்கிறார்.

காவலன்

### ஏர்பிடி...

அளித்தது அலை பயிரை
அதில் தப்பியது காளை
ஏங்கிய உழவன்
ஏர்பிடிக்கிறான்
எதிர்கால உணவுக்காய்

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

### இனிமேல் வசந்தம்

மாட்டைப் போல உழைக்கும் மனிதர்
மனிதரைப் போல உழைக்கும் மாடு
இங்கு நம்பிக்கையும் முயற்சியுமே காட்சி
வாழ்வில் இனிமேல் வசந்தம்

இ.நவகேதீஸ்வரன்,
சுன்னாகம்.

### உழவுத் தொழில்

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
உழுதுண்டு வாழ்வோரை வணங்கிடுவோம்
அடிமையில்லா - உழவுத்தொழிலைச்
செய்யும் தொழிலாளியே!
அதிகாரம் மிக்க - உயர்ந்த
தொழில் உமது தொழில்!
நீங்கள் வயலை உழுது - பயிர்களை
விதைத்தால்தான் எம் பசியும்
உம் பசியும் ஆறும்!
உமது தொழில் மென்மேலும்
உயர்ச்சிபெற்று ஒளிமயமாகத்திகழ
படைத்த இறைவன் படியளப்பானப்பா.

திருமதி. S. பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.

## மௌனத்தின் தேடல்கள் - 50



### உயர்ந்த மனிதன்

உலகிலே உயர்ந்த
தொழில்
உழவுத் தொழில்...
இன்று நீர் ~ ஏர்
பிடிக்கவில்லையென்றால்
நாளை எமக்கோ
உண்பதற்கு உணவில்லை...!
பாரெங்கும் உமது
புகழ் பரவுமையா...!
பாரினில் உயர்ந்த
மனிதன் நீதானையா...!

S.விது,
வண்ணையூர்.

### உணவு கொடுக்கும் விவசாயி

நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த
உம் உடலை வருத்தி உணவைக்
கொடுக்கும் விசாயிகளே!
எருதுகளுடன் நீரும் வயலுக்கு
செல்லாவிட்டால் - எம்
நிலைதான் என்னாகும்?

ப.சுதாஸ், கொம்மந்தறை.

### மனத் துணிவு

போரனர்த்தத்தால் பிரிக்கப்பட்டோம்!
பேரனர்த்தத்தாலும் பிரிக்கப்பட்டோம்!
நிவாரணத்திலும் பிரிக்கப்பட்டோம் - மீள
புனரமைப்பதிலும் பிரிக்கப்பட்டோம் - யார்
ஏறெடுத்துப் பாராவிடினும்
ஏரெடுத்துத் தரையை அகழ்ந்து
மீட்புப்பணியில் ஈடுபட்டு - எம்
பாரம்பாயத்தைக் காப்போமெனமனத்துணிவுடன்
சுறுசுறுப்பாய் வயல் உழுதிடும் விவசாயி இவர்.


பொ.புனிதன், வரியப்புலம்

### விவசாயிக்கோர் பண்ணிசை...!

தரைகிழித்து
தரணி சிறக்க
கமம் கைத்தொழில் செய்து
சொந்தக்காலிலே நிற்போம்!
மாட்டுடன் மாடாய் மாய்கிறான்
மாண்புறு விவசாயி - அதோ
உலகச்சக்கரம் சுழல்கிறது
சுனாமி அரங்கில் கூத்தாடினாலும்
மனம் துவளாது - எம்
உயிர்காக்க உழைப்பவனை
ஏற்றமுடன் ஏத்துங்கடி! - தினம்
பாமாலை சூடி வாழ்த்துங்கடி!

இரா.குமரகுரு,
பண்டத்தரிப்பு.

## மௌனத்தின் தேடல்கள் - 52



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றும் உள்ளத்து
உணர்வுகளை
**மிகச் சிறிய**
கவிதைகளாக்கித்
**தபால் அட்டையில்**
வலம்புரி -சங்குநாதத்
திற்கு அனுப்பி
வையுங்கள.
***கிடைக்கவேண்டிய***
***இறுதித் திகதி***
- 21.03.2005
அனுப்பவேண்டிய
முகவரி:-
மௌனத்தின்
தேடல்கள்- 52
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## கவிதைக் கலசம்

### ஊண் எடுத்த சுனாமி

கடல் அலையே!
உன்னுள் எழுந்த புன்னகையின்
பெருமிதத்தால்தானே - இப்
பூமியெங்கும் சுற்றிப்
பார்க்கப் புறப்பட்டாய்...
கடலே... உன்னானந்தப்
பசி தீர்ந்துவிட்டதா?
உன் கரையோரத்திலே
கூடிக் குதூகலித்தவர்களையின்று
குரல் கொடுக்க முடியாது
உருக்குலைந்தவர்களாய்
ஊரெங்கும் உறங்க
வைத்திட்டாயே...
தாயென எண்ணியவர்களுக்கு
நீ காட்டிய தரிசனமா - அல்லது
உன் இரையை தாரைவார்த்திட்ட
கடனுக்காய் அவர்களையே
உன் ருசிப் பிணமாக்கினாய்?
இதுவா உன் மனுநீதி!?
வையகம் போற்றிட வாழ்ந்த - நீ
வஞ்சிக்கும் அளவிற்கு...
உன் வரவானதே!!
இரண்டே நிமிடத்தில்
இருபதாயிரம் இன்னுயிரை
இரையாக்கிவிட்டு
இரக்கத்துடன் அமைதி
கொள்கின்றாயா...?
கொள்ளு....!
காலத்தின் துயரங்கள்
கலைந்திட்டாலும் - எம்
உறவுகளின் ஆத்மாசாந்தி
அடைந்திட்டாலும் - நீ
எமக்கிளைத்திட்ட
கொடூரங்கள் - எம்
நெஞ்சினை விட்டகலாது!!

தெ.தீலீவ், சித்தன்கேணி.

### ஏன் நடித்தாய்?

**பெண்ணே!**
**நீ பாசமழை பொழிந்தது**
**என்னைப் பேகிலியாக**
**அலையவைக்கவா?**
**இருந்தும் உன் ஞாபகங்களை**
**இனிமையாகச் சுமக்கின்றேன்**
**உன் ஞாபக நீரோடையின்**
**சலசலப்பு என்னைத் தினம் தினம்**
**சலனப்படுத்துகிறது!**



**என் பாசத்தை- நீ**
**பொய் என்று சொல்லி**
**காயப்படுத்தினாய்!**
**அந்த வலிகூட**
**சுகமாய் எனக்குள்ளே**
**கண்ணீர்த்துளிகளை**
**பிரசவித்துக்கொண்டிருக்கின்றன.**
**உள்ளே அழுது**
**வெளியே சிரிக்கும் வித்தையை**
**இந்தப் பாழாய்ப்போன**
**அக்கா என்ற பாசம்தான்**
**கற்றுத் தந்தது!**
**உன் போலிப் புன்னகையில்**
**தான் பொய்யாகிப்போனதால்**
**அன்பு வார்த்தையைத் தேடி**
**அலைகிறேன் ஓர்**
**அநாதை போல்....**

நோயல், குருநகர்.

### நான் புதியவன்!

சொந்த நாட்டில் சுதேசியாய்
சுற்றித்திரிந்த நாட்களையும்
அகதிகளாகவே அங்கீகாரம்
பெற்றதையும் - அகதிமுகாமில்
அடைபட்டுக் கிடந்ததையும்
குப்பி விளக்கின் எண்ணெய்
படாத திரியைத் தூண்டிவிட்டு
பாடம் படித்ததையும்
காதைப் பிளக்கும் சப்தங்களால் - எம்
செவிகள் அடைபட்டுப் போனதையும்
என்னுடலைச் சுமக்க முடியாதபோதும்
அடையாள அட்டையைச் சுமந்து
திரிந்ததையும்
நெற்றித் திலகத்தையும் திருநீற்றையும்
அழித்துக்கொண்டு வீட்டைவிட்டு
வெளியேறியதையும் நான் மறந்தால்....
நான் புதியவன்!

மு.உதயன்,
மானிப்பாய்.

### பழகிய பின் விலகியவளுக்கு!

நீ!
தென்றல் போல
என்னை மகிழவைத்துப்
பின்
தள்ளிப்போன
தோழமைப் புயல்
சிரிக்கவும்
சிந்திக்கவும் வைத்து
சீக்கிரமே
போக்கை மாற்றிக்கொண்ட
போக்கிரியடி நீ...!
கற்புப் போல
நட்பைப்
பேணவேண்டிய
நீ
கோணலாகிப்போன
கோடாகி விட்டாய்!
வேலி தாண்டி
வெளியேறி விட்ட
வெள்ளாடாகி விட்டாய்!
நீ!
பழகி இருந்த
பழைய ஞாபகங்களில்
தினந்தோறும்
முத்துக் குளிக்கின்றன
என்னிரு விழிகளடி
விஷமக்காரி!
பழகிய பின்
விலகிப் பிரிந்த
இதயமே...!
உன்னை என்
இதயம் இன்னும்
மறக்கவில்லை
நினைக்கக்கூட
மறந்தாய் நீ....
மறக்கக்கூட
நினைக்கவில்லை
நான்

சி.வேணி, மூளாய்.

## இன்று ஒரு தகவல்

# கோதுமை

ஒரு அம்மா தனது கணவனைப் பார்த்து “கொள்ளு உடலுக்கு நல்லதாம். அவித்துத் தருகிறேன் சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டார். இவர் மிகவும் யதார்த்தமாகத்தான் கேட்டார். ஆனால் இதைக்கேட்டதும் கணவனுக்குக் கோபம வந்துவிட்டது. என்னை என்ன குதிரை என்று நினைத்து விட்டாயா?” என்று சண்டைக்குப் போய்விட்டார்.

“சரி! கேள்வரகு இருக்கிறது.களிசெய்து தருகிறேன் சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டார். நீ என்ன பெரிய ஜெயில் அதிகாரி என்று நினைப்பா? எனக்குக் களி செய்து தருவதற்கு?” என்று சத்தம் போட்டார். இவரைப் எப்படி சமாளிப்பது என்று மனைவிக்குத் தெரியவில்லை. கொஞ்சம் யோசித்தார். “சரி.. கோதுமை ரவை இருக்கிறது. உப்புமா செய்து தரவா? என்று கேட்டுப் பார்த்தார். என்னை என்ன நீரிழிவு வியாதிக்காரன் என்று நினைத்தாயா?” என்று கத்தினார்.

கடைசியாக மனைவி ஒரு வழியைக் கடைப்பிடித்தார். அதில்தான் அவர் சரியாகவந்தார். மறு நாள் முதல் ‘எது இருந்தாலும் போடு சாப்பிடுகிறேன்’ என்று உட்கார்ந்து விட்டார். அப்படி ஒன்றும் இவர் பெரிதாக எதையும் செய்து விடவில்லை. வீட்டில் எதுவும் இல்லை என்று சொல்லி ஒரு நாள முழுதும் பட்டினி போட்டார் அவ்வளவுதான் அதன்பின் அவர் எதையும் சாப்பிடுவதற்கு தயார்.

கோதுமை உப்புமா சாப்பிடுகிறீர்களா?என்று கேட்டதற்கு எனக்கு என்ன நீரிழ்வு வியாதியா? என்று கேட்டாரே அதிலும விஷயம் உள்ளது இருதய நோய் நீரிழிவுநோய் இவற்றை தடுப்பதற்கு கோதுமையில் உள்ள நார்ச்சத்து மிகவும் உபயோகப்படுமாம். ஒரு மகளிர் கல்லூரியில் மனையியல் பாடம படிக்கும் மாணவிகள் ஒரு நாள் வந்து கோதுமையில் உள்ள குணங்கள் என்ன என்பதை விபரமாகக் கூறிவிட்டுப் போனார்கள்.

ஆதிகாலத்திலிருந்தே கோதுமைக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் இருந்து வந்துள்ளதாம். எகிப்து நாட்டில் நைல் நதிக்கரையோரத்தில் கிடைத்த பழங்கால கல்வெட்டுக்களில் கூட கோதுமை பற்றிய விபரங்கள் உள்ளனவாம். அதை எப்படி பயிர செய்வது, அறுவடை செய்வது , மாவாக்குவது, உணவுப் பண்டம் தயாரிப்பது போன்ற விஷயங்கள் அந்தக் கல்வெட்டில் இருக்கிறதாம். அது மட்டுல்ல! அங்கே சில கல்லறைகளை தோண்டிப்பார்த்தபோது இறந்தவர்களோடு கோதுமை பண்டங்களையும் வைத்துப் புதைத்திருந்தார்களாம்.

இன்று 25 நாடுகளில் அரிசி அடிப்படையான உணவு! 45 நாடுகளில் கோதுமை அடிப்படையான உணவு. அகத்தியர் குணபாடம் என்று ஒரு நூல் நம்மிடம் உண்டு. கோதுமை அந்தக் காலத்தில் மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப் பட்டுவந்தது. என்ற விடயம் அதில் உள்ளது. கோதுமையை சோறாக்கிச் சாப்பிட்டால் தேகபலம் கூடும். உடைத்து நொய்யாககி கஞ்சியாக வைத்துச் சாப்பிட்டால் வாதசுரம்,தடிமன, கபம் எல்லாம் சரியாகிவிடுமாம். அரைத்துமாவாக்கி அடை செயது சாப்பிட்டால் உடல் வண்மை அதிகரிக்குமாம். இந்த விடயங்கள் அகத்தியர் குணபாடத்தில் உள்ளதாம். இப்போது டாக்டர்கள் இதைச் சிபாரிசு செய்வார்கள்.

கருவுற்ற பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் போன்றோருக்குத் தேவைப்படும் புரதச்சத்து, சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து “B”, உயிர்ச்சத்து போன்றவையாகவும் கோதுமை உணவு கொஞ்சமாக சாப்பிட்டாலும் அதிகமாகச் சாப்பிட்ட மாதிரி ஒரு நிறைவு வந்துவிடும். அதனால் சாப்பிடும் அளவு குறைந்துவிடும். அதனால் தான் உடல் குண்டாக இருப்பவர்களுக்கு இதை சிபாரிசு செய்கின்றார்கள்.

‘காவேரி ஓரமாக விளையும் வெற்றிலையை கொடுத்து விட்டு கங்கை ஓரமாக விளையும் கோதுமையை வாங்கிக் கொளவோம் என்றார் பாரதியார். கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவேரி வெற்றிலைக்குமாறு கொள்வோம் எனறார். கோதுமைப் பலகாரம் சாப்பிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் அதுவும் ஒரு விதமான சுகம்தான்.

அந்தக் காலத்தில் கோதுமை நிறைய விளையும் ஒரு தேசம் இருந்தது. அதற்கு ஒருராஜா இருந்தார். அந்த ராஜா ஒரு நாள் தன் அமைச்சரை அழைத்தார். என்ன அமைச்சரே! நம்மிடம் கையிருப்பில் உள்ள கோதுமை இன்னும் எவ்வளவு நாட்களுக்கு வரும்” என்றார். “இன்னும் இரண்டு வருடங்களுக்கு வரும் மகாராஜா” என்றார் அமைச்சர்.

இதைக் கேட்டதும் ராஜா மிகவும் சந்தோஷப்பட்டார். அப்படியென்றால் இன்னும் இரண்டு வருடங்களுக்கு நமது நாட்டில் பஞ்சமே இல்லை என்றார் மிகவும் மகிழ்ச்சியாக ! அமைச்சர் தலையை சொறிந்து கொண்டே அருகில் சென்று அப்படி இல்லை மகாராஜா! நான் சொன்னது நம் இருவர் வீட்டிலும் உள்ள கையிருப்பைப் பற்றி என்றார்.

**தென்கச்சீ கோ. சுவாமிநாதன்**

# இராணுவ கொலை வழக்கு விசாரணைகளில் யாழ். பொலிஸார் கடும் மெத்தனப்போக்கு

## வவு.மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் குற்றச்சாட்டு

(வவுனியா)

பத்திரிகை விற்ற இளைஞன் ஒருவன் மீதான கொலை முயற்சி வழக்கில் யாழ்.பொலிஸார் உதாசீனமாக நடந்து கொள்வதாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, இந்த வழக்கை நடத்துவதற்காக அதிகாரம் வாய்ந்த பொலிஸ் அலுவலகர் ஒருவரை அனுப்பிவைக்கத் தவறியதால், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் வவுனியா மாவட்ட நீதிபதி யாழ. பொலிஸ் உயரதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து வெளியிடப்படும் ஈழநாதம் செய்திப் பத்திரிகையை யாழப்பாணத்தில் விறபனை செய்த இளைஞன் ஒருவன் மீது, கடந்த டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி, யாழ்.பஸ் நிலையப் பகுதியில் துப்பாக்கீப் பிரயோகம் செய்து படுகாயப்படுத்தியதறகாக அரசியல கட்சி ஒன்றின் அலுவலகத்திற்கு காவல் கடமையில் இருந்த 3 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டது தொடர்பான வழக்கு இது. இதனிடையில் புளொட இயக்க உறுப்பினராகிய மரபாபு என்று அழைக்கப்படும் இளைஞர் மீது, கடந்த மாதம் 17 ஆம் திகதி, மேற்கொளளபட்ட கொலை முயற்சி வழக்கில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரோ அல்லது அவருடைய கைத்துப்பாக்கியோ சம்பந்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகத தடயவியல் புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஈரப்பெரியகுளத்திற்கும் பூனாவைக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியில் இரவு நேரத்தில் மேற்கொளளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது மரபாபு படுகாயமடைந்தார். இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருந்ததாக சந்தேகங்கள் நிலவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயினும் விசாரணைகளின் போது எல்பிட்டி என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ இடத்தில் இருந்ததாகக் கிடைத்துள்ள புதியதகவலையடுத்து, புதிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து, சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கைத்துப்பாக்கிக்குரிய குண்டுகள் இந்தக் கைத்துப்பாக்கியில் இருந்து தீர்க்கப்பட்ட வையா என்பதைக் கண்டறிவதற்காக இவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக நேற்று நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (க-4)

## இலங்கைக்கு வழங்கிய நிதி குறித்து சர்வதேச நாடுகள் விபரம் வெளியீடு

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் அனர்த்த நிதியாக தம்மால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதிகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் விபரங்களை வெளியிட்டுள்ளன.

இரு நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தங்காலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கைகளுக்காக இன்னும் 5 சதமாவது பணமாக இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கம் ஆழிப்பேரலையின் பின்னர் கிடைத்த நிதிகளைக் கையகப்படுத்தி வைத்துள்ளதாக சுமத்தப்பட்டகுற்றச்சாட்டுக்களையும் ஜனாதிபதி மறுத்திருநதார். இதனையடுத்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த ஜப்பானியத் தூதரகத்தின் பேச்சாளர் யஹடேசி மஸ்லோ கருத்துத் தெரிவிக்கையில்,

ஜப்பானிய அரசாங்கம் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்துக்கு அனர்த்த நிதியாக 81 மில்லியன் அமெரிகக டொலர்களை வழங்கியுள்ளது. ஜப்பானிய அரசாஙகம் மார்ச் 16ஆம் திகதிவரை இலங்கை அரசாங்கத்துக்கு ஆழிப்பேரலையின் பின்னர் நிவாரண புனரமைப்புக்காக 81 மில்லியன் டொலர்களைப் பணமாக வழங்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலகவங்கியின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், உலகவங்கி சுனாமி அனர்த்த நிவாரண நிதியாக 150 மில்லியன் டொலர்கள் வழங்குவது தொடர்பில் ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் சுமார் 15 மில்லியன் டொலர்கள் இலங்கை அரசாங்கததின் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார். (ந-4)

## சட்டவிரோத குடியிருப்புக்களை பொலிஸார் அகற்றியுள்ளனர்

(திருகோணமலை )

திருகோணமலை விளான்குளம் பௌத்த விகாரைக்கு அருகாமையில் சட்டவிரோதமான முறையில் பௌத்த பேரினவாதிகளினால் அமைக்கப்பட்ட குடியிருபபுக்களை பொலிஸார் நேற்று முன்தினம் அகற்றியுள்ளனர்.

ஆழிப்பேரலையினால் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கான குடியிருப்புக்கள் எனக்கூறி குறிப்பிட்ட இடத்தில் 15 குடிசைகள் அமைக்கப்பட்டன.

இது தொடர்பாக திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை அண்மையில் நடத்திய மறியல் போராட்டத்தின்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில ஜெயசேகரவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த சட்டவிரோத குடிசைகளை பொலிஸார் அகற்றிய சமயம் குடியிருப்பாளர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, இதற்கு ஆட்சேபனை தெரிவித்து விளான்குளம் பௌத்த விகாராதிபதி ரொட்டாவே நந்தரத்ன தேரோ மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளார். (க)

## சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வு நாளை ஒஸ்லோவில் இடம்பெறும்

### நாளை மறுதினம் பர்கனில்...

(ஒஸ்லோ)

தெருவழி நாடகங்கள் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பங்காற்றிய விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் தாயக விடுதலைப் பறவைகளின் 19 கலைஞர்கள் கடந்த செவ்வாய்கிழமை மாலை நோர்வே தலைநகர் ஒஸ்லோ வந்தடைந்துள்ளனர்.

நாளை சனிக்கிழமை தாயகக் கலைஞர்கள் பங்கேறகும் பிரமாண்ட எழுச்சி நிகழ்வு ஒஸ்லோவில இடம் பெறவிருக்கின்றது. இவர்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாயகத்திலிருந்து சுவிஸ் நாட்டை வந்தடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கலைஞர்கள், தமிழீழ தாயகத்தின் பல் வேறு பகுதிகளிலும் தெருவழி நாடகங்களை நிகழ்த்தி தமிழழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பலத்தைச் சேர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளின கொள்கை முன்னெடுப்புப் பிரிவுக் கலைஞர்கள் என்பது குறிப்பிடத்தககது.

நாளை சனிக்கிழமை சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வில், புதுவை அன்பனின் நெறியாள்கையில் கரை தேடும் ஓடங்கள், பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் சூரிய தேவியின் சோகங்கள் ஆகிய நாடகங்கள் அரங்காற்றுகை செய்யப்படவுள்ளன என்பதோடு தாயக எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்படவுள்ளன. இந்நாடகங்கள் தாயக மண்ணில் எண்ணற்ற அரங்குகள் கண்ட நாடகங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நோர்வேயின இன்னொரு நகரான பர்கனிலும் தாயகக் கலைஞர்கள் பங்கேற்கும் எழுச்சி நிகழ்வு இடம்பெறுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## ஐ.தே.க. எம். பியை கைது செய்ய பிடியாணை

(கொழும்பு)

கண்டி மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எகெலிய ரம்புக்வல்லவை கைது செய்யுமாறு கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி எம்.இஸத்தீன் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இருவர் சம்பந்தப்பட்ட வாகன மோசடி வழக்கொன்றில பிரதிவாதிகள் சார்பில் சாட்சியாகக் குறிப் பிடப்பட்டுளள குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பல வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகவில்லை.

இதனால் நீதிமன்ற உத்தரவை இவர் உதாசீனம் செய்து வருவதாக நேற்று முன்தினம் இடம் பெற்ற வழக்கு விசாரணைகளின போது குறிப்பிட்ட நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (க)

# இந்தியாவிலிருந்து ஈழம்திரும்பியோருக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் தொழில் சார் உதவிகள்

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம் 2003ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து மீளவும் நாடுதிரும்பியவர்களுக்கு தொழில் சார்ந்த உதவிகளை வழங்க தீர்மானித்துள்ளது.

எனவே 2003 ஆம் ஆண்டுப் பகுதியில் நாடு திரும்பியவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொண்டு உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என இந்நிறுவன அதிகாரி அறிவித்துள்ளார்.

இதில் விமான மூலம் வந்தவர்களும் படகுகள் மூலம் வந்தவர்களும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் தங்கள் பகுதிகிராம சேவையாளர், பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதத்துடன் இந்தியாவில் இருந்து மீள திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் யாழப்பாணம் இல. 38, கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ.ஒ.எம் அலுவலகததில பதிவுகளை மேற்கொளளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மேற்படி நிறுவனம் இவர்களுக்கான தொழில் சார் உபகரணங்களை வழங்குவதுடன் தொடர்ந்து 6மாதங்களுக்கு உதவிப்பணமாக ஆயிரத்து 400 ரூபாவையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி நிறுவனம் இதுவரை யாழ். மாவட்டத்தில 2004ஆம் ஆண்டு மீளத்திரும்பியவர்களுக்கும் 2005 ஆம் ஆண்டு மீளத்திருப்பியவர்களுக்கும் மேற்படி உதவிகளை வழங்கி வருகின்றது. (ப-9)

# பிரிவிலும் பிரிவுகளுண்டு

புதியதொரு காலைப் பொழுது முகையவிழ்க்கும் நேரம். உள்ளுணர்வின் பரபரப்பு ரவிசங்கரைக் கண்விழிக்க வைத்தது.

சூழ்ந்திருந்த இருளும், குளிரும் அவனைப் போர்வைக்குள் இழுத்துவைத்திருக்க உறக்கம் பறந்துவிட்டிருந்தது.

இன்று வட்டக்கச்சிக்குப் புறப்படவேண்டும். வட்டக்கச்சியில் பாடசாலை ஆசிரியராக அவனுக்கு நியமனம் கிடைத்திருநதது. கடமையேற்க இன்று அவன் புறப்படவிருக்கிறான்.

மூன்று ஆண்டுகளாக வேலைதேடி அலைந்த அலைச்சலின் பின் கிடைத்த நியமனம். நீண்ட போரின் பின் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்த'டபபட்டதை அறிந்த மனநிலை.

'புதிய இடம் எபபடி இருக்கும்? வேலை எப்படி இருக்கப் போகிறது? அவனது எதிர்பார்ப்புகள் ஈடேறுமா? அல்லது ஏமாற்றம் ஏற்படக்கூடுமோ?'

மனம் உணர்ச்சிகளின் கலவையாய்க் கிடந்தது. யாழ்பபாணப் பல்கலைக்கழகத்திலேயே படித்துப் பட்டம் பெற்றதால, இதுவரை அப்பா, அம்மா, சகோதரர்களுடனேயே வாழ்ந்துவிட்ட அவனுக்கு இது வேறுபட்ட அனுபவம்.

இதுவரை அவனிடம் ரியூற்றரியில் கல்விகற்ற மாணவர்கள் அவன் இங்கிருந்து போவதையிட்டுக் கவலைப்பட்டனர்.

## சிறுகதைகள்

அவன் ஒரு திறமையான ஆசிரியன். அவனை இழக்க அவர்கள் விரும்பவில்லை.

அவன் சேவையாற்றப் போகும் பாடசாலை எப்படியிருக்குமோ? அது எப்படியிருந்தாலும் அவனிடம் கல்வி கற்கப்போகும் மாணவச் செல்வங்களுக்கு அவன் சிறப்பாகக் கற்பிக்கவேண்டும். அவன் அங்கிருந்து மாற்றலாகி வரும்போது அவர்களும் அவனைப் போகவிடாது தடுக்குமளவிற்கு அவன் நன்கு படிப்பிக்கவேண்டும்.

இதென்ன? அவன் அங்கு போகவில்லை. அதற்கிடையில் இடமாற்றம் பற்றிச் சிந்திக்கிறானே.

"ரவி வட்டக்கச்சிக்கே போகப்போறாய்? போனபிறகு முயற்சியெடுத்து இங்கை மாறி வரலாந்தானே?"

அவனது நியமனம் பற்றிக் கூறியதுமே அம்மா திகைத்து சிறிது தாமதித்து கவலை விரவக் கூறினாள்.

"வட்டக்கச்சிக்கே அப்பொயின்மென்ற்? ஆரையன் பிடிச்சு மாத்துமன்"

நண்பன் வர்மனின் அறிவுரை இது.


"மச்சான் எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் இருக்கிறார். கொஞ்சம் கூடத்தான் கொடுக்க வேணும். ஆனால் உடனை யாழ்ப்பாணம் கிடைக்கும்"

செவவேள் அவனை உடனே அவரிடம் கூட்டிச்செல்லத் தயாராகியும் அவன்தான் தயக்கத்துடன் மறுத்துவிட்டான்.

மனதின் மூலையிலே சுரங்கமமைத்து இவையெல்லாம் பதுங்கியிருந்தது...

மாற்றம் பற்றிய எண்ணம், போகுமுன்பே தலைதூக்குகிறது. மனதற்குளளே சிரித்துக்கொணடே ரவி திரும்புகிறான்.

அண்ணா மால்மருகன் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு சுகமான தூக்கத்தை அனுபவப்பது கண்ணிலே படுக'றது. அவன் சுவடன் பல்கலைகழகத்தில் மேற்படிப்பைத் தொடர, இன்னும சரியாகப் பத்து நாட்களின் பின் புறப்படவிருக்கிறான்.



அந்தப் பத்து நாட்களும் அவனுடனிருக்கமுடியாது போய் விட்டதேயென்ற கவலையும் ரவிசங்கரின் உணர்ச்சிக் கலவையுள்ளே கலந்திருந்தது.

அவன் படித்து முன்னேற ஊக்கசக்தியாக இருந்தவரே மருகு அண்ணாதான். அப்பா நோயுற்றபின் சுந்தரேசன் அண்ணாதான் வீட்டுப் பொறுப்புக்களைச் சுமந்து அவர்களைப் படிக்கவைத்தாலும் மருகு அணணா மேல் அவனுக்கு ஒரு தனிப்பட்ட பாசம் இருந்தது.

பெரியண்ணா அப்பாவின் இடத்தைப் பிடித்துக்கொண்டதால் அவனது மனதில் பணிவையும், மரியாதை கொடுக்கும் தன்மையையுமே அவரால் ஏற்படுத்த முடிந்தது.

மருகு அண்ணா பாசம் மிகுந்த சகோதாரனாக, மனம் விட்டுப் பேசக்கிடைத்த தோழனாக இருந்தார்.

அவரைப் பிரியும் வேதனை பெரும் வேதனைதான். இந்தப் பத்துநாட்களும் அவருடன் இருந்தாற்கூட பிரிவு வந்தேயாகும்.

அவன் நிரந்தர வேலையொன்றைப் பெற்று காலூன்றி நின்று, குடும்பப் பொறுப்புகளுக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

மருகு அண்ணாவும் தன் கும் நாட்டிற்கும் வளம் சேர்க்கவும் கிடைத்த வாய்ப்பை நழுவவிட முடியாது.

குழந்தைகளாகவோ, சிறுவர்களாவோ மாற்றமின்றி இந்த உலகில் அவர்களிருந்து விட முடியாதே.

புரண்டு படுத்த மால்மருகன் ஏதோவோர் உணர்வின் தூண்டுதலிலே கண்விழிக்க, ரவியின் சிந்தனையிலாழ்ந்த முகம் கண்ணெதிரே தெரிகிறது.

அவன் போர்வைக்குள்ளே சுருண்டுகொண்டாலும் மனம் விழித்துக்கொண்டு வெளியே வநது நின்றது. ரவியால் தூங்க முடியாதுதான்.

பத்து நாட்களின் பின் இதே போன்றதொரு குளிர்காலையில் மால்மருகனும் இந்த வீட்டிலிருந்து புறப்படப்போகின்றான். அன்று அவனும ரவியைப் போல் தவிப்பான்.

வெளிநாட்டுப் புலமைப் பரிசில் கிடைத்துவிட்டது. இனனும் மூன்று வருடங்களில் அவன் ஒரு கலாநிதி பட்டம்பெற்று மீண்டு வரப்போகிறான்.

இப்பொழுது மனைவியையும், குழந்தையையும் அழைத்துச் செல்லப்போகிறான்.

அவனுடைய உறவு அந்தச் சின்ன வட்டந்தானா?

அப்பா, அம்மா, அண்ணா தங்கைகள், தம்பி, நண்பர், உறவினர், அயலவர், இப்படி நீண்டுசெல்லும் உறவுகளின் பிரிவு இதயத்தையும் பிரிக்கிறது.

அவன் பிறந்து வளர்ந்த வீடு, சுற்றித்திரிந்த இடங்கள் அனைத்தையும் விட்டு ஒரு நெடுந்தொலைவிற்குச் செல்லப் போகிறான்.

படுக்கையைப் பிரியமுடியாத அப்பா. வயோதிபத்தைத் துணையாக்கிக் கொண்டுவிட்ட அம்மா.

கண்கள் கசிகின்றன.

இப்படியொரு புலமைப்பரிசில் எல்லோருக்கும் கிடைப்பதில்லையே. ஓர் ஒளிமயமான எதிர்காலததிற்கான வாசற்கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

அந்த எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையில் மனதின் பூஞ்சிறகு விரிகிறது. அது சுவீடனின் குளிர்பனியிலே போய்க் குத்திக்கொள்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்திலே அணி முதல்வனாக மிளர்நதவன் அவன். திறமையான விரிவுரையாளன் என்று பாராட்டப்படுகிறவன். இதே திறமையைப் போகுமிடத்திலும் காட்டி பாராட்டுக்கள் பெறவேண்டும்.

அவனது திறமையைக் கண்டு, அங்கேயே தொடர்ந்து ஆய்வுகள் செய்யும் பணியில் ஈடுபடுமாறு அவர்கள் கோருவார்களோ?

நினைவின் மகிழ்வில் உதடுகள் நெகிழ்ந்து புன்னகைத்தன.

மீண்டும் புரண்டு படுத்தவனுக்கு எதிரே உள்ள அறையல் சுந்தரேசன் மேசையின் முன் அமர்ந்திருப்பது தெரிகிறது.

பெரியண்ணாகூட இந்த நேரம் எழும்பிவிட்டாரே. ரவி போகப் போவது அவரையும் பாதித்திருக்குந்தானே. அவர் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறாரே. கந்தோர் வேலையை வீடுவரை அவர் கொண்டுவந்தது கிடையாது. ஏதாவது அவசர வேலையாயிருககும். மால்மருகன் கண்களைமூடி உறங்க முயல்கிறான்.

சுந்தரேசன் அதிகாலை முதலே மேசையின் முன் உட்கார்ந்து தனது தலைமையகத்திற்கு அனுப்புவதற்காக அந்த மனுவை எழுதிக்கொண்டிருந்தான்.

நேற்று வந்த அந்தக் கடிதம்....

அதுமுதல் வேதனையினால் மனமொன்றை உருவாக்க' உள்ளே வைத்ததுபோன்ற ஓர் உணர்வில் அவன் தவித்தான். அது அவனை இரவு முழுவதும் உறங்கவிடவில்லை.

அந்தச் செய்தியை எவரிடமும் அவனால் கூறமுடியவல்லை. மறுநாள் ரவி வீட்டைவிட்டுப் போகவிருக்கிறான். பத்து நாட்களில் மூத்த தம்பி மருகுவும் புறப்படபோகறான். இந்தநிலையில் அவனும் திருகோணமலைக்கு மாற்றலாகிச் செல்லப் போகிறானென படுக்கையிலிருக்கும் அப்பாவிடம் கூறமுடியுமா? அல்லது அம்மாவிடந்தான் சொல்லமுடியுமா?

பிரிவு என்ற முட்செடியை அவர்கள் வெறுத்தாலும் புதிய வேலைவாய்ப்பு, கலாநிதிப் பட்டத்திற்கான புலமைபபரிசில் என்ற அழகிய நறுமனம் வீசும் மலர்களை அச்செடியிலே கண்டதும் மனங்கள் அதனை ஏற்கத தயாராகிவிட்டன. ஆனால் இவனது பிரிவு குடும்பத்தை ஈடாடவைத்துவிடும்.

அவன் போய்விட்டால் அப்பாவை. யார் கவனிப்பது..?

அவன் தனது மாற்றத்தை இரத்துச்செய்யக் கோரி நீண்டதொரு கடிதத்தை அதிகாலை முதலே எழுதிக்கொண்டிருந்தான்.

அக்கடிதத்தின் பிரதியொன்றுடன் ரவியின் நண்பன் செவ்வேளிடம் செல்லவேண்டும் என மனதிற்குள் தீர்மானமெடுத்தான்.

**சி. யோகேஸ்வரி**
**கோப்பாய்.**

# அச்சாப்பிள்ளையள்

விலைவாசி ஏறிக்கொண்டே போகுது. வீட்டிலே நான் படித்துவிட்டு பெற்றோருக்குப் பாரமாக இருப்பதாக உணர்கிறேன். வேலையும் கிடைப்பதாகத் தெரியவில்லை. அடிக்கடி காரணமில்லாமல் கறுவிக் கொண்டிருக்கிறார்கள். எப்போது முறுகலாக வெடிக்குமோ தெரியாது...? அதற்குப் பல தந்திரோபாயங்களை வகுத்து அவற்றில் ஒன்றை பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தினேன்.

மாதத்தில் இரண்டுமுறை தலைமயிர் வெட்டுவது வழக்கம். நாலு தடவை சவரம் செய்வது வேறு. இதை அரைமடங்காகக் குறைத்துவிட்டால்.... ஒரு மாதத்திலை குறித்ததொகை மிஞ்சினால் வருடத்தில் 'இந்தளவு' மிஞ்சுமே என்று என்ரை மரமண்டை 'மற்ஸ்' மண்டையாகத் தொழிற்படத் தொடங்கியது.

அடியேனுடைய உள்ளத்திலே நண்டநாளைக்குப் பிறகு உவகை பொங்குகின்றது. எல்லாரிட்டையும் 'அச்சாப்பிள்ளை' எண்ட பேர் கேட்கலாம். குழந்தைப் பிள்ளையளுக்கு அச்சாப்பிள்ளை சொல்லுற மாதிரி எனக்கும் சொன்னால் நான் குளிர்ந்து போயிடுவன்.

சலூனில் "ஏன் தம்பி முழு மயிரையும் மழிக்கச் சொல்லுறீர் ? பாக்க அசிங்கமா இருக்கும்" எண்டு ஒரு டசினுக்கு இரு தடவை குறைவாகச் சொல்லியிருப்பார்.

"ஐயா. அது என்ரை விருப்பம்" என்ற கடுமையான சொற்றொடரோடு தலைமயிர் தொடர்பும் அறுந்தது.

வீட்டிலை. "என்ராமோனை பேன் பொடுகு எண்டால் சுடு அரப்பு வைச்சு முழுகியிருக்கலாம். இன்னும் அதுக்கு எத்தினை மருந்துகள் இருக்க முழுமொட்டை அடிச்சுக்கொண்டு வந்து நிக்கிறியே. கண்டறியாத பழக்கங்கள். போ மோனை போய் தலையைக் கழுவிக்கொண்டு வா" என்ற பாட்டியின் அனபும் கண்டிப்பும் கலந்த தடவலுடன் புறப்படுகினறேன்.

"அண்ணா ஏதாவது புதுப் படம தியேட்டருக்கு வந்திருக்கா?"

"ஏன்? எனக்கு தெரியாது"

"இது நான் ஏனெண்டா உம்மடை தலையை விடுதலையாக்கிக்கொண்டு வந்திருக்கிறீர். வீட்டிலை சீனி. மாவுக்குக் குறை விருந்தாலும் சினிமாப் பின்பற்றலுக்குக் குறைவில்லையே...." நறுக்கெனக் கூறி மறைந்தாள் என் தங்கை. அது சுரீரென்று உறைத்தது.

என்னுடைய 'திருக்கோலம்' அம்மாவுக்குத் 'திருகுதாள'க் கோலமாகத் தெரிந்திருக்க வேண்டும்.


**வினோதரன்**
**ஒட்டுவெளி**

"இதென்ன ரவுடி மாதிரி. உண்ணான சொல்லிப்போட்டன். உது வளரும் வரையும் ஒரிடமும் வெளிக்கிடக்கூடாது. ஓ... சொல்லிப் போட்டன்" அதோடை அப்பாவின்ரை வில்லன்ரகப் பார்வையும் இலவசமாகக் கிடைத்தது.

(... ஆம் பக்கம் பார்க்க)

# வடபுல இந்து ஆலயங்களின் பங்களிப்பு என்ன?

## முல்லை மக்களின் ஆதங்கம்



சுனாமிப் பேரழிவால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களின் துயர் துடைக்க சாதி, மத, இன பேதமின்றி இலங்கையில் பல பகுதிகளிலிருந்தும் மக்களும் ஓடோடி வந்து உதவிகள் புரிந்தும் ஆறுதல் வார்த்தைகள் கூறியும் அவர்கள் துயரங்களில் பங்குகொண்டுள்ள நேரத்திலே வடஇலங்கையிலுள்ள எந்த ஒரு இந்து ஆலயமும் உதவிக்கரம் நட்ட முன்வராதது குறித்து முல்லை வாழ் இந்து மக்கள பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுனாமிப் பேரழிவுச் செய்தி அறிந்ததும் மலையகத்திலுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் உணவுப் பொருட்களையும், உடுபுடவைகளையும் வழங்கி அவர்கள் துயர் துடைக்க முன் வந்துள்ளன. ஆனால் வடபகுதியில் ஆயிரக்கணககான இந்து ஆலயங்கள் இருந்தும் அவற்றில் ஒன்று கூட அல்லலுற்ற மக்களுக்கு அபயகரம் நீட்டாமல் திருவிழாக்கள் நடாத்துவதிலும், சித்திரத் தேர் அமைதிப்பதிலும், கும்பாபிசேகங்கள் நடாத்துவதிலும் தமது முயற்சிகளை முடக்கிவிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலே சுனாமி பேரழிவு ஏற்பட்டதும் குன்றங்குடி மடாதிபதி பொன்னம்பலம் அடிகளார் மடச்சம்பிரதாயங்கள் அத்தனையையும் பொருட்படுத்தாமல் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒன்று கலந்து உதவிபுரிந்தார் என்ற செய்திகளைப் பத்திரிகைகள் மூலமறிந்த முல்லை மக்கள் வடபுல இந்துமதப் பெரியார்களது இச்செயலைக் கண்டு 'யாரிடம் நோவோம்; யார்க்கெடுத்துரைப்போம்' எனப் பெருமூச்சுவிட்டவண்ணமே இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ ஆலயங்கள் அனைத்தும் துயருற்ற மக்களுக்கு அபயகரம் நீட்டி தாராளமாக உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றன. வணக்கத்துக்குரிய குருமார்களும் சகோதரிகளும் நலன்புரி நிலையங்களுக்குத் தினசரி சென்று துயரமடைந்து முடங்கிக்கிடக்கும் மக்களுக்கு ஆறுதல்கூறித் தேற்றிவருவது மாத்திரமன்றி, உறவுகளை இழந்து ஏங்கிக் கிடக்கும் சிறார்களுக்கு ஆறுதல் கூறி விளையாட்டிலும் கல்வியிலும் பயிற்சியளித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.



எந்த ஒரு நலனபுரி நிலையங்களுக்காவது எப்பொழுதுதாவது இந்து மத குருமார் சென்றார்களா? என்று எழுப்பப்படும் கேள்விக்கு யாரால் விடையிறுக்கமுடியும்?

அனைத்தையும் இழந்து அல்லற்பட்ட முல்லை மக்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக பொங்காவலை பிரதேச செயலர் தலைமையில் 150க்கும மேற்பட்ட சிங்கள சகோதரர்கள் முள்ளியவளைப் பகுதியில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் உணவு, உடை போன்ற பொருட்களை வழங்கி உதவியது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். (து.128)

## யாழ்ப்பாணத்தில் மணலின் விலை அதிகரிப்பு
## கட்டடத்தொழிலாளர்கள் தட்டுப்பாடு

### நிர்மாணப் பணிகள் யாவும் பின்னடைவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில, கட்டட நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மணலுக்கான கட்டுப்பாடுகள் தொடர்வதன் காரணமாக மணலைப் பெற முடியாமல் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் புதிய வீடுகளை நிர்மாணிப்பவர்களும், சேதமடைந்த வடுகளைப் புனரமைப்பவர்களும தமது பணிகளைத் தொடரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேசமயம் நிர்மாணப் பணிகளுக்கான மணலைப் பெறுவதற்கு பிரதேச செயலர்களின் முன் அனுமதியைப் பெறுவதிலும், மணலை டிராக்டர்கள் மற்றும் லொறிகளில் ஏற்றுவதற்கும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக கி வருகின்றனர்.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி வருபவர்களை பொலிஸார் கண்காணித்து கைது செய்துவருவதால், டிராக்டர் மற்றும் லொறி போன்ற வாகனங்களின் சொந்தக்காரர்கள் பொலிஸ் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்கள் போன்றவற்றுக்கு அலைந்து திரிந்து வருகின்றமையும் அவதானிக்கபபடக்கூடியதாகவுள்ளது.

அத்துடன், சில சந்தர்ப்பங்களில சட்டவிரோதமான முறையில மணலை ஏற்றிவரும் சாரதிகள் பொலிஸாரின் கண்களில் படாமல் குறுக்குவழிகளில் தமது வாகனங்களை அதிவேகமாகச் செலுத்தி, பிடிபடாமல் தப்பித்து வருகின்றனர் என வும் கூறப்படுகின்றது.

இத்தகைய நிலைமை காரணமாக மணலின் விலையும் அன்றாடம் அதிகரித்துவருவது தெரி யவருகின்றது.

இதேசமயம் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதற்குரிய மேசன் தொழில் புரிவோருக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## மெய்வன்மைப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகள் இன்றும், நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகக் கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ப-79)

## காணிப்பிரச்சினைக்கு தீர்வுகாண
## துரித காணி செயலணி அமைப்பு

(கரணவாய்)

வடக்கு -கிழக்கு மாகாண காணி வேலைகளை துரிதப்படுத்தி, மக்களின் காணிகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக 'துரித காணி செயலணி' அலுவலகங்கள் வடக்கு- கிழக்கு மாவட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ்மாவட்டத்துக்கான செயலணி யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்டச் செயலகம் அமைந்துள்ள வளவில், பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் மேலமாடியில் கடந்த முதலாம் திகதி முதல் இயங்கி வருகின்றது.

இச்செயலணிக்கு உதவி காணி ஆணையாளராக குஞானசேகரம்வடக்கு -கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இச்செயலணி ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக யாழ்.மாவட்ட மக்கள் கீழக்காணும் விடயங்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

1.தொலைந்துபோன காணி ஆவணங்களை திரும்பப் பெறுதல்.

2.நீண்டகாலமாக அரச காணிகளில் ஆக்கிரமித்து குடியிருப்பவர்களில் தகுதியானவர்களுக்கு காணிக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

3.அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளை தமது உரிமையாளர்கள், உறவினர்கள் ஆகியோர்களுக்கு உரிமை மாற்றம் செய்தல்.

4. காணித்துண்டுகளை பிரிவிடல்செய்து உரிமையாளர்களுக்கு வழங்குதல்.

5.காணி உரிமையாளர்கள் இறந்தால் அவரின் காணிகளை உரிமையாளர்களுக்கு மாற்றம் செய்தல் போன்ற வையாகும் (தத்துவ உரிமை).

யாழ். மாவட்டத்திலுள்ள அரச குடியேற்றக் காணிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் காணிப் பிரச்சினைகளை தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக தங்கள் பகுதி பிரதேச செயலர் அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பிரதேச செயலர் இவ் விண்ணப்பம் சார்பாக விசாரணை செய்து நியாயமான தீர்வுகளை வழங்குவார்கள்.

பரதேச செயலர்களுக்கு 'துரித காணிச் செயலணிக்கு குழு' ஆலோசனைகளை வழங்கி தீர்வுகளை விரைவாக வழங்க ஒத்துழைப்பு வழங்கும்.

உலக வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்களுக்கு சொந்தமாக காணி இருத்தல் வேண்டும்.

எனவே காணி ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு முன்கூட்டியே காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். (க-69)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோயில் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'புலம் பெயர்ந்த நாடுகளில் சைவம்' என்னும் விடயம் பறறி சுவிஸ் சைவநெறிக் கூடத்தின அமைப்பாளர் தி.முரளிதரனும், 'உலகளாவிய ரீதியில் சைவசமயம் எதிர்நோக்கும் சவால்கள்' என்னும் விடயம் பற்றி சுவிஸ் சைவநெறிக் கூடத்தின் அமைப்பாளர் தி.சிவகீர்த்தி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ப-9)

## சம்பளப் பிரச்சினை குறித்து
## மேசன் தொழிலாளர்கள்
## ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கட்டடத் திணைகளத்தைச் சேர்ந்த மேசன் தொழிலாளர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை முறைப்பாடு செய்துள்ளனர்.

தமது வேலை அடிக்கடி இடைநிறுத்தப்படுவதுடன், வேலை செய்த நாட்களை விட குறைவான நாட்களுக்கே சம்பளம் வழங்கப்படுகின்றது எனவும், தமது சம்பளம் காலதாமதமாகவே வழங்கப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டி, இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு 75 மேசன் தொழிலாளர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப் பதிகாரி ருபான் சந்திரசேகரவிடம் முறைபபாடு செய்துள்ளனர். (ந.19)

## அச்சாப்பிள்ளை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாயம் நண்பர்களிடமும் ஏதாவது காதுக்கு இனிமையாய்க் கிடைக்கும் என எண்ணினேன்.

என்னைக் கண்டவுடன் 'பொக்' என விழித்து சிரித்துவிட்டு

"மச்சான். இவர் எங்கையாலும் பெட்டையளுக்குப் பின்னாலை திரிஞ்சு சேட்டை விட்டிருப்பர். அப்ப கலாசாரம் பேணுற குழு ஆளைப் பிடிச்சு மொட்டை தட்டிவிட்டிருக்கு" என தனது கற்பனைக் குதிரையை வேகமாகப் பாயவிட்டான் நண்பனொருவன்.

நண்பிகள் தமது பங்கைச் சரிவரச் செய்தார்கள். "என்ன காணும் காதல்ல தோல்வியெண்டா தம். தண்ணி. தாடியைத்தான் கண்டிருக்கிறம். நீர் மட்டும் புதுமையா தலையை சீ... தலைமயிரை மழிச்சு வைச்சிருக்கிறீர்" என்று தங்களது காதல் அனுபவங்களை நக்கல் வடிவாகத் தந்துகொண்டிருந்தார்கள்.

இந்தளவு மன உடைவுக்கு உள்ளேயும் புறோக்கர் விட்டபாடில்லை. விடாப்பிடியாகப் பொம்புளை பார்க்கக் கூட்டிக்கொண்டு போனார். இம்மாதம் நல்ல பலனாம். இது தவறினால் நாலுவரிசம் தள்ளிப்போகுமாம். சோதிட மிரட் டல் இது.

பெண்ணைப் பார்த்து எனக்கு நூறுவீதமும் பிடித்துவிட்டது. அவளது விருப்பத்தைக் கேட்ட போது. "இவர் பிக்கு போல.... நான் திடமா ஒண்டு சொல்லுறன். துறவியளையும், மதகுருமாரையும் திருமணம் செய்து அவர்களது புனிதத்தைக் கெடுக்க நான் தயாராக இல்லை. இது என் இலட்சியம்" என்றாள்.

இந்த மிச்சம் பிடிக்கிற நல்ல செய்கையால் கைப்பிடித்தல் கூட இல்லாமல் போகலாம் யார் கண்டது...? நம்பிக்கையீனம் சூடேற்றுகிறது. "ஆண்டவா... முருகா நீ தான் தஞ்சமெடா.." அமைதியாகக் கோயிலடியில் உட்காந்துவிட்டேன்.

"எல்லோரும் பு,சுங்கோ.. ஆ தம்பி..." பிளந்தவாயுடன் ஐயர் வரவேற்கிறார்.

"எப்ப கதிர்காமம் போய் வந்தனீர்.." அங்கலாய்ப்பு தொடர்கிறது.

"கதிர்காமம் எப்படி இருக்கு? மாணிக்க கங்கை வத்திப் போச்சுதாம்" கேள்விகள் தொடர்கின்றன.

இனியும் இருந்தால் கதிர்காம முருகனின் தேக நலன்களையும் விசாரிக்கக்கூடும்.

விறுவிறு என்று எழுந்து நடக்கத் தொடங்கினேன். எல்லாரும் அச்சாப்பிள்ளையள் நான் மட்டும் தான்...?

# பிரதமரைப் போன்று ஜனாதிபதியும் வெளிநாட்டு உதவிகளின் விபரத்தை வெளியிடவேண்டுமாம்

## என்கிறார் ராஜித சேனாரட்ன எம்.பி



(கொழும்பு)

**சுனாமி நிவாரணப் பணிக்கான வெளிநாட்டு நிதி உதவிகள் ஒன்றும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளமை முற்றிலும் பொய்யானது. நிவாரணப் பணிக்காக இது வரை கிடைத்த வெளிநாட்டு நிதி உதவிகள் குறித்து ஜனாதிபதி விபரங்களை உடன் வெளியிடவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் எம்.பி.யுமான ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.**

வெளிநாட்டு நிதி உதவிகள வந்து குவிந்த வண்ணமுள்ளதாக அரசாங்க அமைச்சர்கள் கூறுகின்றனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனக்கு கிடைத்த நிதி உதவி குறித்து பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இநத நிலையில் வெளிநாட்டு நிதி உதவிகள் 5 சதமும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்..

தங்காலையில் நடைபெற்ற கூட்ட மொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க சுனாமி நிவாரணப் பணிகளுக்கு வெளிநாடுகள் உறுதியளித்திருந்த நிதி உதவிகளில் 5 சதம் கூட கிடைக்கவில்லை எனறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இக்கூற்று குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே ராஜித சேனாரட்ண எம். பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

வெளிநாடுகளில் இருந்து நிதி உதவிகள் வந்து குவிந்த வணணம் உள்ளதாக அமைச்சர்கள் பலரும் கூறுகின்றனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தனகது வெளிநாடு மற்றும் உளநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி தொடர்பான விபரங்களை பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விட்டு அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளார்.

அதேபோல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி உதவி தொடர்பான விபரங்களை வெளிப்படுத்த வேண்டும்.

இதனை விடுத்து நிதி உதவி வழங்கப்படவில்லை என்று ஜனாதிபதி முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முற்படக் கூடாது.

வெளிநாட்டு நிதி உதவி கிடைக்கவில்லையென ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் திறைசேரியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர நிதி உதவி கிடைத்து வருகின்றது எனக் கூறுகின்றார். அப்படியானால வெளிநாட்டில் இருந்து கிடைத்த நிதியினை ஜனாதிபதி நாடடின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்தி விட்டாரா?

எனவே இவ்விடயம் குறித்து உணமை அறிய வேண்டுமானால இது குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும். வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கவில்லை என கூறும் ஜனாதிபதி, ஜனாதிபதி மாளிகையில் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் நிதி உதவி பெற்றுக் கொள்ளும படங்கள் பத்திரிகையில் வெளியானதை மறந்து விட்டாரா? எனவே ஜனாதிபதி நாட்டுக்கு உண்மையைக் கூறவேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (க)

# சமூக நிலையை குழப்புவதற்கு அதிரடிப் படையினர் முயற்சி!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் மக்களின் சுமூக நிலையை குழப்புவதில் விசேட அதிரடிப்படையினர் திட்டமிட்ட முறையில் செயற்பட்டு வருகின்றனர் என குற்றச்சாட்டுக்கள தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன, அச்ச நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

திடீர் திடீரென விசேட அதிரடிப் படையினர் கொண்டுவரப்பட்டு சில இடங்களில் இறக்கப்படுவதுடன், அவர்கள் வீதிகளில் செல்பவர்களை எவ்வித காரணமுமின்றிச் சோதனைக்கு உட்படுத்துவதும் மக்களை மிக நீண்டநேரம் கால தாமதப்படுத்துவதும் அதிகரித்த வண்ணமுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் பகுதிகளில் மட்டுமே அதிரடிப்படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இன்றைய சமாதான சூழ்நிலையில் கூட விசேட அதிரடிப்படையினர் வீதிகளில ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் சோதனைச்சாவடிகளை அமைத்தலும் ஒருவித போர்ச் சூழலை ஏற்படுத்துவதாக இருப்பதுடன், மக்கள் மத்தியில் தேவையற்ற விதத்தில் அச்சத்தையும் ஏற்படுத் துவதாக உள்ளது.

அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படை முகாம் பகுதியில் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிரடிப் படையினர், பனங்காடு பிரதேசத்தில் புதிதாக சோதனைச் சாவடிகளையும், பொத்துவிலில் புதிய இராணுவ முகாம ஒன்றினையும் அமைத்திருக்கின்றனர்.

இதனால் மக்கள் பெருமளவு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருககின்றது. போர் நிறுத்தம் நடைமுறையிலுள்ள இனறைய சமாதான சூழ்நிலையில் கவசவாகனஙகளைப் பயன்படுத்தி வீதி ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதும், சோதனை நிலையங்களைப் புதிதாக அமைத்துக்கொள்வதும் எதற்காக என்ற கேள்வியை அப்பகுதி மக்கள எழுப்பியிருக்கின்றார்கள்.

இது அரசாங்கம் மிக விரைவில் யுத்தத்தை ஆரம்பிக்கப்போவதையும், தமிழர்களின மீது கெடுபிடிகளை அதிகரித்து அவர்களை யுத்தத்திற்கு இழுப்பதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளதா என்ற சந்தேகமும் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையான ஒரு பாதுகாப்பு நடவடிக்கை என இதனை எந்தவகையிலும் கூறிவிட முடியாது. யாருக்கு இவர்கள் பாதுகாப்பளிக்க முனைகின்றனர். குழப்ப நிலையை உருவாக்க முயல்பவர்களுக்கா என கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

இநத பாதுகாப்பு நடவடிக்கைகளினால் எவற்றை இவர்கள் சாதித்துள்ளார்கள் என்பதையிட்டும் கவனத்திற்கொள்வது அவசியம். இங்கு வீதிகளில் தமிழீழ வீடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சுடப்படும் போது மாத்திரம் இவர்கள் வீதிகளில் காணமல் போய் விடுகின்றனர். பின் மீண்டும் சோதனை நடவடிக்கையினை ஆரம்பித்து அப்பாவிப் பொது மக்களை துன்பப்படுத்த ஆரம்பிக்கின்றனர். (க)

## இராசி பலன்

18.03.2005

பங்குனி 03, வெள்ளிக்கிழமை

அட்டமி பி.ப 04.18 மணிவரை

மிருகசீரிடம் மு.ப 9.34 மணிவரை

இராகுகாலம் 10.48 - 12.18 மணிவரை

சுபநேரம் 6.18 - 7.48 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், குடும்ப சுகம், பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| இடபம் | மாதர் நட்பு, உணர்ச்சி வசப்படுதல், காரிய தாமதம், பணவிரயம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம். |
| கடகம் | பிதா சிந்தை, பிரயாணம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | கீர்த்தி, தெய்வதரிசனம், தொழில் சிந்தை, உறவினர் உதவி. |
| கன்னி | சுபநிகழ்வு, புதிய தகவல், மேன்மை, தொழில் விருத்தி. |
| துலாம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண்பயம், புதிய முயற்சி. |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்னை, காரிய தடங்கல், வாகன பயம், உடல் வியாதி. |
| [illegible] | தெய்வதரிசனம், திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய். |
| மகரம் | சத்துருஜெயம், தொழில் விருத்தி, தெய்வசிந்தை, தேகநலன். |
| கும்பம் | தாழ்ந்த சுபாவம், வியாபார விருத்தி, காரிய இடையூறு, அமைதிக்குறைவு. |
| மீனம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, காரிய தாமதம், பயந்த சுபாவம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

### இலங்கையில் முதன் முறையாக

# பார்க்கின்ஸன் நோயைக் குணப்படுத்தும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

(கொழும்பு)

பார்க்கின்ஸன் நோயைக் குணப்படுத்துவதற்கான சத்திரசிகிச்சையை இலங்கை டாக்டர்கள் முதற்தடவையாக வெற்றிகரமான முறையில் செய்து முடித்திருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஹெகடர் வீரசிங்க தெரிவித்தார்.

நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்களான சுனில் பெரேரா, ரஞ்சனி கமகே ஆகியோர் தலைமையிலான மருத்துவ நிபுணர்கள் குழு இச்சத்திர சிகிச்சையைக் கடந்த சனியன்று மேற்கொண்டதாகவும் அவர் கூறினார்.

இச்சத்திர சிகிச்சைக்கு சுமார் ஐந்து மணித்தியாலயங்கள் சென்றன இச் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்ட நபரின் ஆரோக்கியம் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் நல்ல முறையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது, 'பார்க்கின்ஸன்' நோய்க்கு இலங்கையில் மருந்துப் பொருட்கள் மூலம் தான சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது ஒரு நரம்பு நோயாகையால் இவ்வகைச் சிகிச்சை நீண்டகாலம் எடுக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் தான் தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் நிபுணர்கள் முதற் தடவையாக இச்சத்திர சிகிச்சையை மேற்கொண்டனர்.

இச்சிகச்சை வெற்றிகரமாக அமைத்திருக்கிறது. இது இலங்கை மருத்துவத் துறைக்குக் கிடைக்கப்பெற்ற கௌரவமாகும.

இதேபோல் காக்கை வலிப்பு நோய்க்கும் சுமார் ஒருவருடத்திற்கு முன்னர் முதற்தடவையாக சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. அச் சிகிச்சையும் வெற்றிகரமானதாக அமைந்தது. இவ்வாறு மேலும் பலநோய்களுககு சத்திரசிகிச்சை மூலம் எதிர்காலததில் சிகிச்சை அளிக்கத்திட்டமிட்டுள்ளோம் என்றார். (க-9)

# நிறுத்தல் அளவை கருவிகளில் முறைகேடு தொடர்பில் யாழில் 72 வழக்குகள் பதிவு

யாழ்.மாவட்டத்தில் நிறுத்தல் அளவைகள் கருவிகளில் முறைகேடு சம்பந்தமாக 72 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கொழும்பு நிறுத்தல் அளவைகளின் தலைமைக் காரியாலயத்தின் பணிப்பில் வவுனியா நிறுத்தல அளவைகள் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், யாழ்ப்பாண நிறுத்தல் அளவைகள் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் இணைந்து கடந்த வாரங்களில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொணட சோதனைகளின்போதே முறைகேடான நிறுவை அளவைகள் தொடர்பாக 72 சம்பவங்கள் கண்டறியப்பட்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தராசு, படிகளுக்கு முத்திரை குத்தாமல் வைத்திருந்தமை, வியாபார பாவனைக்கு உதவாத தராசுகளை பாவனையில் வைததிருந்தமை, மீன்சந்தைகளில் படிகளுக்குப் பதிலாக சைக்கிள அச்சுக்களைப் பாவித்தமை மற்றும் வர்த்தக நிலையங்களில் படிகளுக்குப் பதிலாக மஞ்சள் பைக்கற்றுக்கள் பொதி செய்யப்பட்ட பாக்குகள், நீலப பைக்கற்றுக்கள் போன்றனவற்றைப் பாவித்தமை போன்ற பலமுறைகேடுகள் மேற்படி பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டன.

இவ்வாறான நடவடிக்கைகளில் வர்த்தகர்களை ஈடுபடவேண்டாம எனவும் தராசுகள், படிகளுக்கு முத்திரை குத்தாதவர்கள் பிரதி புதன்கிழமைகளில மாவட்ட நிறுத்தல் அளவைப் பகுதி அலுவலகத்தில் வந்து முத்திரையிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-19)

# மகளிர் உலகம்

## பால் குடித்தால் பருக்கள் வரும்



பால் குடிப்பதால் பல்வேறு நன்மைகள் உண்டு. ஆனால் ஒருநாளைக்கு 2 முறைக்கு மேல பால் குடிக்கும் பெண்களுக்குப் பருக்கள் தோன்றும் அபாயம் இருப்பதாகப் புதிய தகவல் ஒனறு வெளியாகியுள்ளது.

குறிப்பாக வெண்ணெய் எடுக கப்பட்ட பாலை ஒருநாளைகக்கு 2 முறைக்குமேல் குடிக்கும் பெண் களில் 44 சதவீதம பேருக்கு பருக்கள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக அந்தத் தகவல் கூறுகிறது.

பாலில் உள்ள ஹார்மோன்களும், இயற்கையான சில மூலக்கூறுகளும்தான் இதற்குக் காரணமாக இருக்கின்றன.

வெண்ணெய் எடுக்கபபட்ட பாலைத் தவிர, வேறு எந்தவகையான பாலாக இருந்தாலும் ஒருநாளைக்கு 3 முறைக்கு மேல் அருந்தும் பெண களாக இருந்தால், அவர்களில் 22 சதவீதம் பேருக்கு பருக்கள் வர வாய்ப்பு உள்ளது.

மேலும் பெண்களின் உடம்பில் இயல்பாக இருக்கும் ஹார்மோன் மற்றும் வேதிப்பொருட்களின செயறபாடுகளைப் பொறுத்து பாதிபபு கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

## சமைத்துச் சுவைப்போம்

### கடலைக் குழம்பு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கொண்டைக் கடலை – | 1/2Kg |
| செத்தல் மிளகாய் – | 10 |
| மல்லி – | 1/4கப் |
| பெருஞ்சீரகம் – | 1 தேக்கரண்டி |
| கறுவாப்பட்டை – | 2 துண்டு |
| கராம்பு – | 5 |
| ஏலக்காய் – | 5 |
| தேங்காய் (சிறிதாக நறுக்கிய துண்டுகள்) - | 1கப் |
| எண்ணெய் – | 1/4 கப் |
| கடுகு – | 1 தேக்கரண்டி |
| சிறிய வெங்காயம் – | 1/4 கப் நறுக்கியது |
| கறிவேப்பிலை – | தேவையானளவு |
| உப்பு – | தேவையானளவு |

***செய்முறை:***

கடலையை முதல்நாள் இரவே தண்ணீரில் ஊற வையுங்கள். காலையில் கடலையை நன்கு கழுவி அதில் தேங்காயத் துண்டுகளையும் சேர்த்து தேவைக்கேற்றளவு நீர்விட்டு, உப்புச் சேர்த்து வேகவையுங்கள். தாச்சியில் ஒரு தேக்கரண்டி எண்ணெய்விட்டு சூடானதும் செத்தல்மிளகாய், மல்லி, பெருஞ்சீரகம், கறுவாப்பட்டை, கராம்பு, ஏலக்காய் ஆகியவைகளை இட்டு வறுக்கவும். பின்னர் இந்த வறுக்கபட்டவைகளை அரைத்தெடுக்கவும். பின்னர் மீதமிருகதும் எண்ணெயில் கடுகையிட்டுச் சிறிய வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்துத் தாளிக்கவும். பின் வேகவைத்த கடலைக் கலவையையும் அரைக்கபடட கடலையையும் தாளிதத பொருட்களுடன் சேர்த்து நன்கு கிளறினால் கடலைப் குழம்பு தயாா.

## இளம் வெயிலில் நில்லுங்கள்!

தினமும் எட்டுமணி நேரம் அல்லது அதற்கு மேல் கொம்பியூட்டரைப் பார்த்து வேலைசெய்பவர்களின் கண்கள் அதிக அழற்சியைப் பெற்றுவிடும்.

இதைத் தவிர்க்க, கண்களை மூடிக்கொண்டு வட்டவடிவமாகத் தேங்காய் எண்ணெயைத் தேய்த்து, காலைநேர இளம் வெயிலில் சூரியன் உதிக்கும் திசையைநோக்கி நின்றவாறு, நான்கு புறமும் கண்களைச் சுழலவிட்டு வேடிக்கை பாருங்கள்.

கண்களை மேலும் கீழும் அசைத்துப் பயிற்சி செய்வதும் நல்லது.

## இளமையின் இரகசியம்

காலம் மாறிக்கொண்டிருக்கிறது. எப்போதும் இளமையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கவேண்டும் என்று பெண்கள் காணும் கனவுகளும் அதிகாத்துக்கொண்டிருக்கின்றன. இளமையையும், ஆரோக்கியத்தையும் பேணி, அவர்கள் முதுமையைத் தள்ளிப்போட விரும்பு கிறார்கள்.

உலக ஆரோக்கிய அமைப்பு (W.H.O) முதுமையைத் தள்ளிப போட மூன்று விஷயங்களை வலியுறுத்துகின்றன. அவை ஆரோக்கியமான உடல், ஆரோக்கியமான மனது, சிறப்பான சுற்றுச்சூழல், முதுமையைத் தள்ளிப்போடுவதில் சமூகத்திற்கும் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது என்று உலக ஆரோக்கிய அமைப்பு குறிப்பிடுகிறது.

காரணம், பொதுவான ஆரோக்கியத்திற்காகச் செலவிடப்படுவதில் மிகப் பெருந்தொகை, முதுமைப் பிரச்சினைக்காக ஒதுக்கப்படுகிறது. முதியவர்கள் அதிகரிக்க அதிகரிக்க ஆரோக்கியத்துறை சந்திக்கும் சவால்களும் அதிகரித்துக்கொண்டே போகும்.

முதுமை வந்தபின்பு அதனைத் தவிர்ப்பது சிரமம் என்பதைப் பெண்கள் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். இளம் வயதிலே எடுக்கும முன்னெச்சரிக்கை உணர்வு நடவடிக்கை மூலம், முதுமையைத் தவிர்த்து எப்போதும் இளமையாக இருக்கமுடியும்.

உடல் ஆரோக்கியமாக இல்லாமல் இருந்தால், அது மனதையும் பாதிக்கும். ஆரோக கியமான உடல இருப்பவர்களிடமே ஆரோக்கியமான மனதும் இருக்கும். உடலும் மனதும் மேம்படும்போது இளமை மேம்படும். அழகும் மேம்படும்.

மன நெருக்கடியில் சக்கித்தவிக்கும் பெண்கள் சீக்கிரமாகவே முதுமையைத் தேடிப் போகிறார்கள். முகத்தை மனதின் கண்ணாடி என்பார்கள். அதுபோல உடலு மனதின் கண்ணாடியாக இருந்து, மன நிலையைப் பிரதிபலிககிறது. பிரச்சினை இல்லாத பெண்கள் இல்லை. பிரச்சினைகள் வரும்போது உணர்ச்சிவசப்படாமல் பதட்டப்படாமல் எதிர்கொண்டு சமாளித்தால் உடலும் மனதும் பாதிக்காது.



முதுமையைத் தள்ளிப்போட விரும்பும் பெண்கள், உணவிலும் சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும். கொழுப்பு சத்து நிறைந்த உணவுகளை தவிர்பபது நல்லது. தேவைக்கு மட்டும் உணவு சாப்பிடவேண்டும் என்ற கொள்கையிலிருந்து ஒருபோதும் மாறக்கூடாது.

இளமையைப் பாதுகாக்க விரும்புகிறவர்கள் பழங்களையும், காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்க்கவேண்டும். தொடர்ந்து சைவ உணவையே சாப்பிடுகிறவர்களுக்கு நோய் குறையும். நோய் குறையும் போது ஆரோக்கியம் கிடைகும். முதுமை தள்ளிப்போகும்.

இளமையைப் பாதுகாக்க உடறபயற்சி, ஓய்வு, உறக்கம் ஆகிய மூன்றும் தேவை. தினமும் அரைமணிநேர உடற்பயிற்சி, தேவையான ஓய்வு, குறைந்தது 6 மணிநேரத் தூக்கம் போன்றவை முதுமையை தள்ளிப்போடும் என்று ஆரோக்கிய நிபுணர்கள் வலியுறுத்துகிறார்கள்.

யோகாசனம் செய்யும பெண்கள் எப்போதும் இளமையாக இருப்பார்கள்.

பெண்கள் குண்டாகவும் இருக்கக்கூடாது. அதுபோல் ரொம்ப மெலிந்தும் விடக்கூடாது. அதிகம் மெலிந்துபோவதும், குண்டாவதும் முதுமையை விரைவாக வரவழைக்கும்.

பெண்கள் மிகக் கவனமாகக் கையாளவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அது மாதவிலக்கு கால பிரச்சினை. மாதவிலக்கு கால குளறுபடிகளை அவவப்போது சிகிச்சைசெய்து சரியாக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் முதுமை வந்துவிடும். இளமை சென்றுவிடும்.

சரியான முறையில் இயற்கையான வழிகளில் பெண்கள் உடலை அழகுபடுத்திக்கொள்ள வேண்டும். அழகாக இருக்கும் பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், மனநிறைவும் கிடைக்கும். அவை மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்து இளமையைப் பாதுகாக்கும்.

## குழந்தைகளைப் பாதிக்கும் சளித்தொல்லை



நோய் எதிர்ப்பு சக்தி குறைநத குழந்தைகளைப் பாதிக்கும் தொலலைகளுள் முக்கியமானது சளித தொல்லை. சுவாசக்குழல் வழியே ஒவ்வான்கள்: கிருமிகள், குளிர்ந்த காற்று, நெடிகள போனறவை நுரையீரலுக்குச் செல்லும்போதும், சில உணவுகளால் ஒவ்வாமை ஏற்படும்போதும் நுரையீரலில் அழற்சி ஏற்படடு சளித்தொல்லை வருகிறது.

காதுக்கும், மூக்குக்கும் இடையில் 'ஈஸ்டேஷியன் டியூப்' எனப்படும் குழாய் இருக்கிறது. மூக்கில் தொற்று ஏற்பட்டால் இந்த இணைப்புக்குழாய் வழியாக காதுக்கு கிருமி பரவும். இதனால் அதிகம் வரக்கூடிய நோய் டான்சில் பிரச்சினை. தொண்டைச் சதையில் ஏற்படும் அழற்சிதான் 'டான்சிலிடிஸ்'. இந்தப் பிரச்சினை இருந்தால் தொண்டையல் வலி, தொண்டை வீக்கம், காய்ச்சல், காதுவலி பேன்றவை வரும். காதில் சீழ் வடிதலும் இருக்கும். தொண்டை வீக்கம் ஏற்பட்டால் நான்கைந்து நாட்கள் நீடிக்கும்.

### மூக்கு ஒழுக்கு

வைரஸ் நோய்த்தொற்றின் காரணமாக மூக்கு ஒழுக்கு ஏற்படுகிறது. துவக்கத்தில் தண்ணீர் போன்ற திரவம் கசியும். பிறகு பிசுபிசுப்பான சளியாக மாறும். இது ஒரு வாரத்திற்குள் சரியாகிவிடும். சிலவேளைகளில் மூக்கடைபபு போன்ற பிரச்சினைகள் ஏற்படடால் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு மூக்கில் அயலபொருடகள் போன்ற ஏதேனும இருக்கின்றனவா என்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். 'சைனஸ' நோயினால் சளித்தொல்லை ஏற்பட்டு மூக்குப்பகுதிக் காற்றறைகள் பாதக்கபபடுவது உண்டு. இந்தப் பிரச்சினைக்கு தற்காலிகமாக மருந்துகள் தீர்வாகாது. மருத்துவரை அணுகி நோயின் தன்மை, நோய் நீடிக்கும் காலம் ஆகியவற்றை அறிந்து சிகிச்சை பெறவேண்டும்.

### காதுப்பிரச்சினை

சளி பிடித்தால் நடுக்காதில் நோய்த்தொற்று ஏற்பட்டு கடுமையான வலி, காது அடைப்பு, காதில் சீழ்வடிதல் போன்ற பிரச்சினைகள் தோன்றுவது உண்டு. இதையும் பரிசோதனை மூலம் அறிந்து நோய் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.பாதிப்பை சரிசெய்யாமல்விட்டால் முழுமையான செவிட்டுத்தன்மை, மூளை அழறசி, முகப்பக்கவாதம் போன்ற நோய்களும் உண்டாக வாய்ப்புண்டு.

### சளித்தொல்லை ஏற்படுவதற்கான காரணங்கள்

சாதாரணமாக சளிச்சுரப்பு எனபது எல்லோருக்கும் இருப்பது இயல்பு. ஆனால் நோய்த தொற்றுக்களால் அழற்சி ஏற்பட்டு சளிப்பிடிப்பது எனபது அசாதாரணமானது. சுத்தமான தண்ணீர் என நினைத்து குழாய்நீரை காய்ச்சிப் பருகாதது, வெளியில் தண்ணீர் அருந்துவது, பழைய உணவுப் பொருட்கள், மோர், தயிர் பேன்றவற்றை அதிகமாக குழந்தைகளுக்குக் கொடுப்பது, அசுத்தமான பழங்கள மற்றும காய்கறிகளைக் குழந்தைகளுக்குக் கொடுபபது, நோய்த்தொற்று உள்ளவர்களோடு குழந்தைகளை நெருங்கவிடுவது, நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்த நிலையில் இருப்பது ஆகியவற்றை சளி ஏற்படுவதறகான முக்கிய காரணங்களாகக் கூறலாம்.

குழந்தைகளை மிகவும் கவனத்தோடும், எல்லாவித பாதுகாப்பு உணர்வோடும் பராமரிக்காவிட்டால் சளித்தொல்லைகள் மட்டுமன்றி பலவித நோய்த்தொற்றுகளுக்கும் ஆளாகநேரிடும். ஒருவேளை குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏதேனும் வந்துவிட்டால் கை வைத்தியம் எதையும் பார்க்காமல் உரிய குழந்தை மருத்துவ நிபுணரை அணுகி சிகிச்சை செய்வது புத்திசாலித்தனம்.

## மீள்பார்வை

# பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 11



### அத்தியாயம் IV

ஒத்திவைப்பு பிரேரணையொன்று அதே கூட்டத்தொடரில் ஏற்கனவே விவாதிக்கப்பட்ட விடயங்களை எழுப்பக்கூடாது. எதிர்நோக்கல் தொடர்பான விதியையும் அது மீறக்கூடாது. ஒத்திவைப்பு விவாதமொன்று வினாக்களுக்கான ஒரு பதிலீடல்ல என்பதும் மனதில் கொள்ளப்பட வேண்டும் . ஒத்திவைப்பு விவாதமொன்றின் மீது வாக்கெடுப்பு நடத்த முடியாது.

*தனியார் உறுப்பினர் பிரேரணைகள்*

நிலையியற் கட்டளை 20(6) இன் கீழ் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமையன்று தனியார் உறுப்பினர் பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றன. எந்தவொரு விடயம் பற்றியதாகவும் இருகக்கூடிய அத்தகைய பிரேரணைகள் கண்டனப் பிரேரணைகளையும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் உள்ளடக்குகின்றன. எனினும் கண்டனப் பிரேரணைகளும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் தனியார் உறுப்பினர் பிரேரணைகளாக இருந்தபோதிலும் அரசாங்கம் சபையின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதென்ற உண்மையை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் நிமித்தம் அப்பிரேரணைகள் வழமையாக அரசாங்க நேரத்தில் விவாதிக்கப்படுவதுடன் பொதுவாக ஏனைய எல்லா அலுவல்கள் மீதும் அவற்றுக்கு முந்துரிமையும் அளிக்கப்படுகின்றது.

தனியார் உறுப்பினர் பிரேரணைகள் பற்றிய முன்னறிவித்தல் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கொடுக்கப்படுகின்றது. ஏதேனும் பிரேரணை ஒழுங்கற்றதெனச் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டாலன்றி அவை ஒழுங்குப் புத்தகத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. எனினும் அவை ஐந்து முழு நாட்கள் கழியுமுன்னர் விவாதிக்கப்படலாகாது. பிரேரணையொன்று ஒழுங்குப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டவுடன் அது சபையின் சொத்தாகிவிடுவதனால் அறிவித்தல் கொடுத்த உறுப்பினர் அதனை எழுத்து மூலம் மட்டும் அதுவும் சபையின் அனுமதியுடன் தான் மீளப்பெறமுடியும்.

ஒரு "தனியார் உறுப்பினர்" என்பவர் பதவி எதையும் வகிக்காதவர். எனவே சபாநாயகர் பிரதிச் சபாநாயகர் குழுக்களின் பிரதித் தவிசாளர் சபை முதல்வர் முதற்கோலாசான்கள் அரசாங்க அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் தனியார் உறுப்பினர் பிரேரணைகளை பிரேரிக்கூலாகாது. தனியார் உறுப்பினர் பிரேரணைகள் ஒழுங்குப் புத்தகத்தில் கால வரிசை ஒழுங்கில் உள்ளடக்கப்படுவதுடன் அதேவரிசை முறைப்படி விவாதத்துக்கும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே முடிவுசெய்யப்படாது எஞ்சியுள்ள பிரேரணைகள் எல்லாம் "அடுத்த தனியார் உறுப்பினர்" தினத்துக்குக் கொண்டு செல்லப்படவேண்டும்.

1995இல் பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு தனியார் உறுப்பினர் பிரேரணை ஒவ்வொன்றும் தொண்ணூறு நிமிடங்களுக்கு விவாதிக்கப்படவேண்டுமென்றும் பிரேரணையை முன்னொழிகின்ற உறுப்பினரைத் தவிர அது பிறிதோர் உறுப்பினரால் வழி மொழியப்படவேண்டுமென்றும் தீர்மானித்தது. அதிலுள்ள விடயத்துக்குப் பொறுப்பான அரசாங்க அமைச்சருக்கும் அவ்விடயத்தில் அவரின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கு வாய்பளிக்கப்படவேண்டும்.

ஏதேனும் ஒரு மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமையன்று பொது அலுவலை எடுத்துக்கொள்ள உத்தேசித்தால் அவ்வாறான பிரேரணையொன்று நிலையிற் கட்டளை 20(4) இன் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

*முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்*

முன்னறிவித்தல் தேவைப்படாத பிரேரணைகளைத் தவிர சமர்ப்பிக்கப்படும் ஏனைய எல்லாப் பிரேரணைகளுக்கும் நிலையியற் கட்டளைகளால் தேவைப்படுத்தப்பட்டவாறு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற மிகப் பொதுவான பிரேரணை வடிவம் ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்கானது. தனியார் உறுப்பினர் சட்ட மூலங்களுக்கான பிரேரணைகள் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசாங்கச் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பிரேரணைகளின் முன்னறிவித்தல்கள் தொடர்பான தேவைப்பாடுகளை நிலையியற் கட்டளை23 கொண்டுள்ளது. எனினும் குறித்த சில பிரேரணைகளுக்கு முன்னறிவித்தல் தேவையில்லை. அவை நிலையியற் கட்டளை 24 இல் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அத்தகைய பிரேரணைகளைப் பொது அலுவல் ஆரம்பத்தின்போது முன்னறிவித்தல்தேவைப்படாத பிரேரணைகளுடன் குழப்பிக்கொள்ளலாகாது. நிலையிற் கட்டளை 24 இன் கீழான பிரேரணைகள் பின்வருமாறு.

1. ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அட்டவணையைப் பரிசீலிப்பதற்காக முழுப் பாராளுமன்றக் குழு கூடுகிள்றபோது தவிர முழுப் பாராளுமன்றக் குழுவில் பிரேரிக்கப்படும் பிரேரணைகளுக்கு முன்னறிவித்தல் தேவையில்லை. முன்னறிவித்தல் தேவைப்படாத பிரேரணைகளில் மிகப் பொதுவானவை சட்டமூலங்களுக்கான குழு நிலைத்திருத்தங்களாகும்.

2. பாராளுமன்றத்தை அல்லது விவாதத்தை ஒத்திவைப்பதற்கான பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவையில்லை. அத்தகைய பிரேரணைகள் பொதுவாக நாள் முடிவில் சபை முதல்வரால் பிரேரீக்கப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.தெரிவுகுழுவின் அறிக்கையை முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்த அல்லது அதனை அச்சிடக்கோருகின்ற பிரேரணைக்கும் முன்னறிவித்தல் அவசியமில்லை.

4. புறத்தோரை வெளியேற்றுவதற்கான ஒரு பிரேரணை முன்னறிவித்தலின்றிச் செய்யப்படலாம். பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்றப் பணியாளரையும் தவிர அரசாங்க அலுவலர்கள் பத்திரிகை நிருபர்கள் கலரிகளிலுள்ள பார்வையாளர்கள் அடங்கலாக ஏனைய எல்லோரும் 'புறத்தவர்கள்' தான். தேவையான போது புறத்தோரைத் தவிர்ப்பதற்கான நோக்கம் சபையில் நடவடிக்கைகள் வெளியிடப்படுவதைத் தடுப்பதற்காகும்.

சபையின் எப்பகுதியிலிருந்தும் புறத்தோரை வெளியேற்றுமாறு கட்டளையிடும் அதிகாரம் சபாநாயகருக்குண்டு. புறத்தவர் எவரேனும் சபையில் முறைகேடாக நடந்து கொண்டால் அவரை வெளியேறுமாறு கட்டளையிடலாம். அவர் வெளியேற மறுத்தால் அவருக்கெதிராகப் பாராளுமன்றத் (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய ஒரு பிரேரணையை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அவ்வேளையில் நடந்து கொண்டிருக்கும் அலுவலெதுவும் இடைமறிக்கப்படலாம்.

5. ஓர் உறுப்பினரை இடைநிறுத்தி வைப்பதற்கான் பிரேரணை சபாநாயகரின் அதிகாரத்தைப் புறக்கணிக்கின்ற அல்லது சபையின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்கின்ற ஓர் உறுப்பினருக்கெதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம் .உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்திவைப்பதற்கான ஒரு பிரேரணையைக் கையாள்வதற்குச் சபாநாயகர் சபையின் நடவடிக்கைகளை இடைமறிக்கலாம்.

6. சிறப்புரிமை விடயத்தையொட்டிய ஒரு பிரேரணை சபையில் சிறப்புரிமை மீறலொன்று இடம்பெறுகின்றபோது முன்னறிவித்தல் கொடுக்கத் தேவையில்லை. அது உடனடியாக எழுப்பப்பட்டுத் தீர்மானிக்கப்படலாம். இதனைப் பொது அலுவல் ஆரம்பத்துக்கு முன்னர் எழுப்பப்படும் சிறப்புரிமை விடயங்களிலிருந்து வேறுபடுத்திப்பார்க்கவேண்டும் . மற்றெல்லாப் பிரேரணைகள் தினப்பணிகள் ஆகியவற்றிலும் பார்க்கப் பாராளுமன்றச் சிறப்புரிமைகளுடன் நேரடியாகத்தொடர்புடைய ஓர் அவசரப் பிரேரணை முன்னீடடையுமென நிலையியற் கட்டளை 25 மேலும் விரித்துரைக்கின்றது. அத்தகைய ஒரு பிரேரணையை எடுத்துக் கொள்வதற்கு வாக்கெடுப்பொன்றைத் தவிர வேறெந்த நடவடிக்கையும் இடைமறிக்கப்படலாம். (தொடரும்)

# உலகமயமாக்கல் திட்டத்திற்கு ஆதரவு வழங்கப்படக் கூடாது

## அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

உலகமயமாக்கல் செயற்திட்டத்திற்கு எந்த விதத்திலும் ஆதரவு அளிக்கக்கூடாது என்று பிரதிப் பாதுகாபபு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகமயமாக்கல் செயல் திட்டத்தினால் மீண்டும் காலணித்துவ நாடுகள் உருவாகும் அச்சம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் இவ்வாறான செயற்திட்டங்களை நம்பி அரசு ஏமாநதுவிடக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (க-9)

# பொலிஸாரிடம் சிக்கிய பல நாள் திருடர்கள்

(கொழும்பு)

நீண்டகாலமாக திஹகொட பொலிஸ் பகுதியில் திருட்டுக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்று சமீபத்தில் திஹகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போது அவாகளிடமிருந்து பெறுமதி மிக்க நகைகள், கைத்தொலை பேசிகள், ரொக்கப்பணம் மற்றும் பல பெறுமதி மிக்க பொருட்கள் கைப்பற்றபபட்டன.

பொலிஸாரின் அறிக்கையின் படி கைது செய்யப்பட்டவர்கள் திஹகொட டிக்வெல திசமஹரகம பகுதியைச் சேர்ந்தவர்களெனத் தெரிகிறது. சிறைச்சாலைகளிலிருந்து தப்பியோடியவர்களும் இவர்களுள் அடஙகுவர். இக்கொள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் கைதுசெய்ய விசாரணை மேற்கொள்ளபபட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை பிரதான மஜிஸ்திரேட் ரோஹான ஜெயவர்தன முன் ஆஜர்படுததப்பட்டு அவர் கட்டளைபபடி சிறையிலடைக்கப்பட்டனர். (து)

# ஸ்ரீ.மு.கா தலைவர் ஹக்கீம் இலண்டன் பயணம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நேற்று முன்தினம் இலண்டன் பயணமாகியுள்ளார்.

பாராளுமன்றக் குழுவொன்றுடன் இந்தியா செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி ஹக்கீம் லண்டனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் முஸ்லிம் காங்கிரஸின அதி உயர் பீடமும், அரசியல் பட்டமும் கொழும்பில் கூடி தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்ததோடு, கட்சிக்குள் நீடித்து வரும் உள் முரண்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய அரசியல் உயர்பீடம் பிரதியமைச்சரான ஹுசைன் பைலாவை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கும் முடிவை எடுத்துள்ளது.

அத்துடன், ஏனையவர்களான ரிசாத் பதியுதீன், நஜீப் ஏ மஜீத், அமீரலி ஆகிய மூவருக்கும் விளக்கமளிப்பதற்காக மேலும் 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# வலுவிழந்தோருக்கு முச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலுவிழந்தோர் தினமாகிய கடந்த செவ்வாய்க்கிழமை வலுவிழந்த சிலருக்கு யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து முச்சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அண்மையில் இந்நிறுவனத்தினூடாக தனிநபர் நன்கொடைத்திட்டததினர் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களில் இருந்து இத்திட்டத்தினரால் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 11 விண்ணப்பதாரிகளுக்கே இம் முச்சக்கர வண்டிகள வழங்கப்பட்டுள்ளன,

இந்நிறுவனத் தலைவரும் பணிப்பாளருமான திருமதி தி.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழவில் பயனாளிகளுக்கான முச்சக்கரவண்டிகள் முகாமைத்துவ சபையினராலும் இம்முச்சக்கர வண்டிகளை அன்பளிப்பு செய்தோராலும் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த வி.பி. விஸ்ணு தாசனால் ஆரம்பிக்கப்பட்ட வலு விழிந்தோர் தனிநபர் நன்கொடைத் திட்டத்தில் இணைந்து செயற்பட விரும்புவோர் IIDS. TAMILWAY.COM எனும் இணையததள முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

# சமூக ஆர்வலர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(கல்வியங்காடு)

சொன்ட் நிறுவன அனுசரணையுடன் கோப்பாய் வடக்கு,மத்தி, தெற்கு சமூக ஆர்வலர்களுக்கான விசேட கலந்துரையாடல் கடந்த 13ஆம் திகதி யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மேற்படி பிரதேசங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செயயும் பொருட்டு ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இணைப்பாளராக பினவருவோரு தெரிவு செய்யப்பட்டனர்.

கோப்பாய் வடக்கு ஆசிரியர் எஸ். சண்முகலிங்கம், கோப்பாய் மத்தி யாழ். பல்கலைக்கழக மாணவன் உ.சுரேஸ்குமார், கோப்பாய் தெறகு யாழ். பல்கலைக்கழக மாணவன தி. உமாசங்கர்.

இக்கலந்துரையாடலில் மாதர் சங்க பிரதிநிதிகள, கிராம சேவையாளர்கள், சமாதான நீதிவான்கள் மற்றும் அரசசார்பறற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-74)

## கோரிக்கை


(காரைநகர்)

காரைநகர் மேற்கு சாம்பலோடை மயானத்தை புனரமைத்துத் தருமாறு பொது அமைப்புக்கள் காரைநகர் பிரதேச செயலிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

காரைநகர் ஆயிலி இந்து இளைஞர் மன்றம், கோவளம் கிராம அபிவிருத்திச் சபை என்பன தனித் தனியாகக் கடிதங்கள் மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளன. (ப-246)

# அரகர என்று அரற்றின் எண்ணிய அனைத்தையும் அடைவர்

செந்தமிழில் சிறந்த சிவ மூல மந்திரங்கள் பல. அவற்



றுள சில இவை: சிவசிவ, ஓம், நமசிவாய, சிவாய நம, அரகர என்பன இநத மகா மநதிரங்கள். விதிவழி வழுவாமல் ஓதின் மதி நினைந்தவை அதிவிரைவில் கைகூடும்.

சேர அரசர் இட்டமாஞ் சிவ மந்திரத்தைக் குதிரையின் செவியல் விதிமுறை ஓத குதிரை வானில் எழப் பாய்ந்தது என்பது பெரிய புராணம்.

அரன் கரன் என்னும் இரண்டு சொற்களின் முதனிலைகள் இணைந்து அரகர என்று ஒரு சொல் போலாயிற்று. மல ஆற்றலைத் தேய்த்தலின் அர என்றும் மாயா காரியத்தை மாய்த்தலின் கர என்றும் பொருள் தரும். இந்த அரகர என்னும் மந்திரத்தை உள்ளன்போடு ஓதுவார்க்கு இந்த உலகத்தில் அரியதானது ஒன்றுமில்லை.

## வெள்ளி நற்சிந்தனை

நாவும் எந்தவித இடர்ப்பாடும் முயற்சியும் இல்லாமல் வாய் இலகுவில் வாழ்த்த வல்லது- 'அரகர, அரகர, அரகர' என்னும ஒலிப்பொருள் உணர்த்தும் சொற்தொடர்.

'அரகர' என்று அரற்றிக் கொண்டிருக்கத் தேவர்கள் ஆவார்கள். தேவர்களானால் இந்திர போகத்தை இலகுவில் அடைந்து இன்புறலாம் என்று தானே பொருள். அரகர என்று அரற்றப பிறவித் துன்பம் அற்றுப போம. பிறவித் துன்பம் நீங்கினால் பிறவாமையாகிய என்றும் இன்பம் பெருகும் பேரின்பச் சிவலோகப் பேறு சித்திக்கும். 'அரகர' என்பதை விட அருமையானதும் அரியதானதுமான மந்திரம் ஒன்று இல்லை. இந்த மானுடர் அரகர என்று சொல்ல அறியாமல் இருக்கின்றார்களே என்று அரனிடத்தில் அன்பு செய்யப் படைக்கப் பெற்ற திருமூலர் சிந்தை நொந்து செப்புகின்றார்.

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவார்
அரகர என்ன அறும்பிறப் பன்றே- (896)

தீமை குறித்து வேடன் புத்திரனுக்கு உபதேசித்தான், பிடுங்கு அடி கொல் என்று.

'ஆகர, பிரகர, சங்கர' என்னும் மொழிகளில் 'கர' (ஹர) சப்தம் அடங்கியமையால் வேடன் உயிர் யமபுரத்தை நாடவில்லை. கயிலாயத்திற்குச் சென்றடைந்தது.

தீமை குறித்து உரைத்த வாசகத்திலும் இவ்வளவு சிவப்பேறு சிநதித்தல் நன்மை நாடி நவிலும் போது அரகரவிற்கு உரிய நற்கதியை ஆர் அளக்க வல்லார்? □

சிவ சண்முகவடிவேல்

# தபால் திணைக்கள ஊழியர்கள் சுகவீன லீவுப் போராட்டம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முனவைத்து தபால் திணைக்கள ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் சுகவீன லீவுப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாக தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் நவரத்தின பண்டாடி தெரிவித்திருக்கிறார்.

பட்டதாரிகளை இத்திணைக் களத்தில் வேலைக்குச் சேர்த்துக் கொள்வதால், ஏற்கனவே ஊழியர்களின் பதவி உயர்வுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், தொலைத் தொடர்பு வலை அமைப்பை தனியார் மயப்படுத்துவதை எதிர்த்தும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தபால் ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றும் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, இத்தொழிற் சங்கப்போராட்டம் அர்த்தமற்றதென தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் சி.மாலியத்த தெரிவித்திருக்கிறார்.

இத்தொழிற்சங்க நடவடிக்கையால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-

# போராளிகள் மீதான துப்பாக்கிச் சூடு அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர குவேனி, துணைப் பொறுப்பாளர் அகநிலா மற்றும் போராளி சசிமதி ஆகியோர் மீது மேற்கொளளப்பட்ட கொலை முயற்சி தொடர்பான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி அக்கரைபற்று - பொத்துவில் வீதியிலுள்ள தம்பட்டை என்னும் இடத்தில் இவர்கள பயணம் செய்த ஆட்டோ இனந்தெரியாத நபரொருவரினால் வழிமறிக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இந்த கொலை முயற்சி தொடர்பாக விடுதலைப் புலிகள் கொடுத்த தகவலொன்றின் பேரில் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த ஜோன்சன ஜெயகாந்தன் என்பவர் சந்தேகத்தின் பிரகாரம் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அது தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று முன் தினம் அக்கரைபற்று நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த போதிலும் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப்புலிப் போராளிகள் மூவரும் நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இவர்கள் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் நீதிமனறத்தில் அறிக்கை சமர்ப்பித்து பிறிதொரு தினத்திற்கு அடையாள அணிவகுப்பை ஒத்திவைக்குமாறு கோரினார்.

இதனையடுத்து அக்கரைபற்று நீதவான் ரி.எல.ஏ.மனாப் எதிர்வரும்30 ஆம் திகதிக்கு அடையாள அணிவகுப்பை ஒத்திவைத்தார். (த)

# எமது போராட்டத்தை உலகறியச் செய்தது தாயகப் படைப்பாளிகளின் கலை வழிவங்களே

## தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன்

(தென்மராட்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச மயப்படுத்துவதில் எமது படைப்பாளிகளின் பங்களிப்புகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றனவயாகும். இந்த வகையில் படைப்பாளிகளின் படைப்புக்களை நாம் பெரிதும் விரும்பிவரவேற்கின்றோம், ஊக்குவிக்கின்றோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் மட்டுவில் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஆசிரியர் க.அருந்தவராஜா எழுதிய கிராமத்தின் சிரிப்பு நூல் அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

மகாவித்தியாலய அதிபர் புலவர் எம்.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுகவிழாவில் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன் தொடர்ந்து உரையாற்றும் போது,

நவரசங்களில் முக்கியமானது சிரிப்பாகும். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று எம்மவர்கள் அடிக்கடி கூறுவார்கள். எமது நாட்டின் சூழ்நிலைகள் காரணமாக நாம் எந்தநேரமும் கவலையுடனும், வேதனையுடனும் வாழ வேண்டியதாகவுள்ளது. எமது வாழ்க்கையை மகிழ்ச்சியுள்ள தாக்கிக் கொள்ள சிரிப்பு மிகவும் அவசியம். எனவே நாம் சிரிந்து வாழப்பழகவேண்டும்.

இந்தவகையில் எமது தாயகத்தில் இருந்து வெளிவரும் படைப்புக்களை நாம் விருப்பத்துடன் வரவேற்கின்றோம். நாம் நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். அதன் மூலம் சிறந்த உலக அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்டார்.

இந்த நூல் அறிமுகவிழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, சிரேஷ்டவிரிவுரையாளர் இ.இரட்ணம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். நூல் பற்றிய வெளியீட்டுரையை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசும், அறிமுகவுரையை ஆசிரியர் க.கந்தவேளும் நிகழ்த்தினர். நூலாசிரியர் க.அருந்தவ ராஜா ஏற்புரையை வழங்கினார். (ப-16)

# வத்தளையில் விபத்து மூவர் உயிரிழப்பு

(வத்தளை)

வத்தளையில் நேற்றுமுன் தினம் அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் வரையில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4.20 மணியளவில் தனியார் வாகனமொன்றும், கடற்படையின் வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

தனியார் வாகனத்தில் பயணம் செய்தவர்களே உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர் எனத தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கடற்படை வாகனசாரதி கைதுசெய்யப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-4)



சென்ற மாதம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இடம் பெற்ற ஆங்கில செயற்பாட்டு அறைத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் செயற்பாட்டறையைத் திறந்து வைப்பதையும், பாடசாலை அதிபர் ரி.மனோகரன், உதவி அதிபர் எம்.ஜெபரட்ணம், ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் அருகே நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:எஸ்.இராமச்சந்திரன்)

# காரைநகர் கோவளம் பகுதியில் கலாசாரச் சீரழிவுகளில் ஈடுபட்டோர் பிடிபட்டனர்

(காரைநகர்)

காரைநகர் கோவளம் பகுதியில் கலாசார சீரழிவில் ஈடுபட்ட மூவர் அக்கிராம பொதுமக்களால மடக்கிப்பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

காரைநகர் கோவளம் பகுதியில் வழமைக்கு மாறாக சந்தேகத்திற்கிடமான முறையில் சம்பவதினத்தன்று மாலை இளம் யுவதி ஒருவர் நடமாடியுள்ளார். இதனை அவதானித்து அப்பகுதி பொதுமக்கள் பின்தொடர்ந்த போது திடீரென அவயுவதி தலைமறைவாகியுள்ளார்.

ஆனாலும் அன்றைய தினம் இரவு சந்தேகத்திற்கிடமான குடியிருப்பற்ற வீட்டினை சுற்றிவளைத்து தேடியபோது,

அந்த யுவதியும் இரு ஆண்களும் கலாசார சீரழிவில் ஈடுபட்ட தடயங்களுடன் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

பிடிக்கப்பட்ட ஆண்கள் மது போதையில் இருந்ததாகவும் பின்னர் கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைத்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ப-246)

# நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய தடுப்பு மருந்து ஏற்றல் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம 10.30 மணிவரை கிழவி தோட்டம் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை தச்சை ஜங்கரா நெசவு சாலை முன்றலிலும் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 3.00 வரை கரவெட்டி மத்தி சிந்தாமணி சன சமூக் முன்றலிலும் இடமபெறவுள்ளது.

இப் பகுதியைச் சேர்ந்தோர் அன்றய தினம் வளர்ப்பு நாய்களையும் கடந்த முறை தடுப்பு மருந்து ஏற்றிய போது வழங்கப்பட்ட அட்டையினையும் கொண்டு வருமாறு பொதுச் சுகாதாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ப)

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை - குறள்

வலம்புரி

## கவனிப்பாரற்ற மண்டைதீவு

யாழ்ப்பாணம் நகரமையத்தில் இருந்து தென் திசையில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருப்பது மண்டைதீவு.

பண்ணைப்பாலம் மண்டைதீவுக்கான ஒரே ஒரு தரைவழிப்பாதை. நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவான மண்டைதீவுக்கு 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி அழிவு ஏற்பட்டது.

கோட்டையில் இருந்த இராணுவத்தை மீட்பதற்காக ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்ட இராணுவம் மண்டைதீவை முற்றுகையிட்டுக் கபளீகரம் புரிந்தது. 50க்கும் மேற்பட்ட பொது மக்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்குப் பலியாகினர்.

கோட்டையிலிருந்து மண்டைதீவுக்கு தப்பியோடிய இராணுவத்தினர் ஏற்கனவே படையினரால்தடுத்துவைக்கப்பட்டிருந்த அல்லப்பிட்டி, மண்டை தீவைச்சேர்ந்த சுமார் இருபத்து ஐந்து இளைஞர்களை சுட்டுப் பொசுக்கினர்.

இருந்தும் அவர்கள் இன்னமும் காணாமல் போனவர்கள் பட்டியலிலே இடம்பெற்றுள்ளனர். இவ்வாறு அழகிய மண்டைதீவுக் கிராமம் 1990ம் ஆண்டு சின்னாபின்னமாகப் போனது.

பின்னர் அந்தக்கிராமத்தை கட்டியெழுப்ப முயனைந்த போதிலும் 1991 ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட தீவகம் முழுவதிலுமான இராணுவ ஆக்கிரமிப்பில் மண்டைதீவு மக்களும் தமது பூர்வீக மண்ணை விட்டு வெளியேறினர்.

இப்போது அந்த ஊர் சிங்கள கடற்படையின் கட்டுப்பாட்டிற்குள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பிரகடனத்துக்குள் அகப்பட்டுள்ளது.

எனினும் வலிகாமத்தின் பகுதி போன்று இல்லாமல் இங்கு ஒருபகுதியில் மக்கள் குடியிருப்பதற்கு கடற்படை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயம் அரச உயர் அதிகாரிகளுக்கு இதுவரை தெரியாது என்று கூறும் அளவிற்கு அவர்களின் பாராமுகம் அமைந்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் கடற்படையின் சூழலுக்குள் வாழுகின்ற மண்டைதீவு மக்களின் நலன்கள் பற்றி அரச அதிகாரிகளோ அன்று அரச சார்பற்ற நிறுவனங்களோ இதுவரை அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை.

கடலால் சூழப்பட்ட இக்கிராமத்துக்குள் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக பாரிய அணைக்கட்டு அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அணைக்கட்டு கடற்படையினரால் உடைக்கப்பட்டு விட்டது. இதனால் கடல் நீர் கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள நெல் விளையும் பிரதேசத்தை உவர் நிலமாக மாற்றி விட்டது.

அதுமட்டுமன்றி அங்கு இருக்கக்கூடிய நன் னீர் கிணறுகளும் உவர் நீராகிவிட்டது. குடியிருக்கின்ற மக்களும் நன்னீருக்காக ஏங்கித்தவிக்கின்றனர். மருத்துவ வசதிகள் எதுவுமேஇல்லை. உடைந்து போய்க்கிடக்கும் அரசினர் வைத்திய சாலையை திருத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் கைமாறிவிட்டதாக மக்கள் குமுறுகின்றார்கள்.

மருத்துவ வசதிகளோ, போக்குவரத்து வசதிகள் எதுவும் இன்றி தனித்தீவில் தங்கியிருக்கும் மனநிலையில் வாழுகின்ற மக்களை புதிய கொலம்பஸ் யாரேனும் கண்டு கொள்வார்களா?

கடல் நீரை தடுக்கும் அணைக்கட்டுகளை புனரமைப்பார்களா? வைத்தியசாலையை திருத்துவார்களா? அல்லது பண்ணைவீதியால் போகும் போது இதுதான் மண்டைதீவு என சுட்டுவிரலால் காட்டுவதன் மூலம் தங்களின் பணியை முடித்துக் கொள்வார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்

# விசேட முகாமைத்துவ புலனாய்வுப் பிரிவு! அரச அதிகாரிகளின் மோசடிகளுக்கு ஆப்பு

### உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தகவல்

(கொழும்பு)

**அரச ஊழியர்கள் மீது எழுந்துள்ள பல்வேறு விமர்சனங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட முகாமைத்துவ நடவடிக்கைப் புலனாய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது என பொது நிர்வாக உள்ளூராட்சி மன்ற உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.**

அரச உத்தியோகத்தர்களிடமிருந்து சிறந்த மற்றும் செயல்த்திறன் மிக்க சேவையை மக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டே இந்தப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களில் எமது அமைச்சு நடவடிக்கைகள், அமைச்சுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பன தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதனால் விசேட நடவடிக்கை முகாமைத்துவப் பிரிவொன்றை நிறுவவேண்டுமென்ற நோக்குடன் இந்தப் பிரிவு நிறுவபட்டுள்ளது. இதன் மூலம் தவறுகள் இடம் பெறும் இடங்களில் தவறுகளைப் புரிபவர்களுக்குத் தண்டனை வழங்குவது மாத்திரமின்றி அமைச்சு ஊழியர்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையில் ஏதேனும் குறைபாடுகள் நிலவுமாயின் அல்லது சேவை உரியமுறையில் கிடைக்காவிட்டால் அவற்றை உரியமுறையில் ஆராய்ந்து இபபிரிவினர் நடவடிக்கை எடுப்பர்.

இந்த முகாமைத்துவ நடவடிக்கை புலனாய்வுப் பிரிவுக்காக 35 பட்டதாரிகள் இணைத்துக கொள்ளப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் 25 பேர் மாவட்டசெயலகங்களில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். அரச ஊழியர்கள் தொடர்பாக எழும் குற்றச்சாட்டுக்கள் குறித்து திடீர் தேடுதல்கள் மற்றும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுதல் இந்த பிரிவுக்கு வழங்கப்பட்ட செயற்பாடுகளாகும். (ப-8)

# அரச சேவைக் குறைபாடுகள் பற்றி 6000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

### அரச சேவைகள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தினது சேவைக்குறைபாடுகள் பற்றி அரசாங்க ஊழியர்களிடமிருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் இதற்குப் புறம்பாக சுமார் 3 ஆயிரம் முறைப்பாடுகள் பாராளுமன்ற முறைப்பாட்டுத் தெரிவுக்குழுவுக்குக் கிடைத்திருப்பதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிடைத்துள்ள முறைப்பாடுகளில் கூடுதலானவை இடமாற்றம் தொடர்பானவை என்று அரச சேவைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பதவி உயர்வுகள் வழங்கப்படாமை தொடர்பாகவும் பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனினும் பதவி உயர்வுகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்துள்ளவர்களில் கூடுதலானவர்கள் குறைந்தபட்ச தகமை கூட இல்லாதவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற முறைப்பாட்டுத் தெரிவுக் குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அமைப்புத்தொடர்பான அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். (ப-4)

## தபால் திணைக்களம் ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது

(கொழும்பு)

தபால் திணைக்களத்தையோ அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களையோ தனியார் மயமாக்க இடமளிக்கப்பட மாட்டாது என்று தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தபால் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவுமே நடாத்தப்படுகிறது என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் திணைக்களத்தில் 22 தொழிற்சங்கங்கள் இருப்பதாகக குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கையில் மூன்று தொழிற்சங்கங்கள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது. (ற-8)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளரின் தொழிலை மேம்படுத்த சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்கு உதவும் முகமாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. சுரேஷ் பிறேமச்சந்திரன், வடமராட்சி, வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளாகளுடன் இணைந்து நோர்வே மக்களின் உதவியுடன் படகுகளைத் திருத்தி அமைக்கும் மையங்களை உருவாக்கி வருகின்றார்.

இதற்கமைய பருத்தித்துறைமுனை, பொலிகண்டி, மாதகல் ஆகிய இடங்களிலும் மட்டக்களப்பிலும் இம் மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றினூடாக நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இதுவரை திருத்தப்பட்டுள்ளன. இம்மையங்களுக்கு அண்மையில் விஜயம் செய்த பாராளுமன்ற உ றுப்பினர் சுரேஷ் பிறேமச்சநதிரன் அதன் குறை நிறைகளைக் கண்டறிந்து மணறகாடு, ஆதிகோவில் (வல்வெட்டித்துறை) ஆகிய இடங்களில் இன்னும் இரு படகு திருத்தும் மையங்களை அமைப்பதற்கும் வெளி இணைப்பு இயந்திரங்களையும் உள் இணைப்பு இயந்திரங்களையும் திருத்துவதற்கு பருத்தித்துறை முனையில முதலாவதாக ஒரு மையத்தை அமைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர படகுகள்,மற்றும் மீன்பிடி உபகரணங்களை முழுமையாக இழந்தவர்களுக்கு அவற்றைப் புதிதாகக் கொடுப்பதுடன் இம்மையங்களில் வேலை செய்யும் அனைவரையும் இரசாயனப்பொருட்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் முழுமையான சீருடைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முலலைத்தீவு, திருகோணமலை, அம்பாறையிலும் இவற்றை அமைகக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமசசந்திரன் முயற்சி எடுத்து வருகின்றார். கடற்தொழிலாளர்கள் விரைவில் தமது தொழிலை ஆரம்பிக்க வேண்டும் எனற நிலைப்பாடடுடன் பாராளுமன்ற உறுப்பினர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## நிவாரண விநியோக மோசடியை எதிர்த்து ஐ.தே.க ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமைக்கு எதிராக ஐக்கியதேசியக்கட்சி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தவுள்ளது.

அரசாங்கம் உரிய முறையில் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கவில்லை என்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய யோசனைகள் கூட அரசிடம் இல்லை என்றும் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நிலையினை மக்களுக்குத் தெளிவுபடுத்தும வகையிலேயே நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (க-9)

## சுனாமி அச்சம் இல்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சுனாமி ஏற்படும் அபாயம் ஏதும் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களமும் புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வாராட்சித் திணைக்களமும் தெரிவிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில நாட்கள் கடல் கொந்தளிப்பாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சுனாமி அச்சம் தொடர்பான முன்னறிவித்தல்கள் எதுவும் தமக்குக் கிடைத்தால் அது குறித்து உடனடியாக அறிவிக்கபபடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிபபாளர் சுனில் செல்வா தெரிவித்தார்.

இதேவேளை, தங்களுக்கு எந்தவொரு சுனாமி எச்சரிக்கை அறிவிப்பும் கிடைக்கவில்லை என்றும் இது குறித்து நாம் அவதானத்துடன் இருப்பதாகவும் புவிச்சரிதவியல் அகழ்வாராட்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அத்தநாயக்க தெரிவித்தார். (க-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**ஆத்ம ஞானம் என்பது உலக விஷயங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வது போன்ற தல்ல. ஆனமக உலகில் நாம் நமது புலன்களுக்குப் புலப்படாத ஒன்றை புலன்களால் அறிய முடியாத ஒன்றை தேடுகிறோம். எனவே அதில் மனத் தளர்ச்சி என்பது அறவே இருக்கக் கூடாது. அப்படிப பட்ட விடா முயற்சியுடன் இருப்பது என்பது சுலபமானதா என்ன?**

சுவாமி விவேகானந்தர்

## புரிந்துணர்வு....

இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ரத்துச்செய்யப்பட வேண்டுமெனக்கோரி ஜே.வி.பி. சிங்கள ஜாதிக சங்கம், சிஹல உறுமய என்பன மனுத்தாக்கல் செய்திருந்தன.

இதில் சிஹல உறுமய தாக்கல் செய்த மனு நேற்று வாபஸ் பெறப்பட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது பிரதிவாதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உட்பட அனைவரும் எதிர் வரும் 28 ஆம் திகதி மேல் முறையீட்டு நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப் பட்டுள்ளது.

(த-08)

## சர்வஜன...

எதுவித அடிப்படையும் இன்றி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த அரசாங்கம் முயற்சிக் கின்றது.

இது ஒரு குறுகிய நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் சதிமுயற்சியாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

(த-04)

# மரண அறிவித்தல்

## விஜயவாசன் இந்திராணி

### (ஸ்ருடியோ விஜேந்திரா உரிமையாளர்)



1-ம் கட்டை டச்சுவீதியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு மீசாலையை (சோலை அம்மன் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட விஜயவாசன் இந்திராணி 14.03.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை அன்னப்பிள்ளையின் அன்பு மகளும் கனகரட்ணம் செல்லம்மாவின் அன்பு மருமகளும் கனகரட்ணம் விஜயவாசனின் (ஊழியர் சாவகச்சேரி நகரசபை) அன்பு மனைவியும் விஜயரூபன், விஜேந்திரன், விஜயரூபி, விஜயராஜ் (சாவ. இந்துக் கல்லூரி மாணவர்கள்) விஜயதாஸ் (சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

சிவசுப்பிரமணியம் (வாசன்-நெதர்லாந்து) செல்வராணி (கனடா) வசந்தகுமாரி (நோர்வே) தவமலர் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச சகோதரியும், ரோகினி (நெதர்லாந்து) துரைராசசிங்கம் (கனடா) துரைராசா (நோர்வே), சச்சி (நெதர்லாந்து) வைகுந்தவாசன் (டென்மார்க்) விஜயகுமாரி, ஜெயக்குமாரி (நுணாவில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 18.03.2005 பிற்பகல் 2மணி அளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.(சோலை அம்மன் கோவிலடி)
T.P:0776136575
0776102603

தகவல்,
விஜயவாசன்(கணவன்)
(ஊழியர் சாவகச்சேரி நகரசபை)

(C-1135)










# மதமாற்றத் தடைச்சட்டத்திற்கு மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம்

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

மதமாற்றத் தடைச்சட்டம் பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப் படும்போது ஒவ்வொரு எம்.பிக்களும் தமது விருப்பப்படி வாக்களிப் பதற்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

மதமாற்றத் தடைச்சட்டம் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுக்கப்படும்போது ஒவ்வொரு எம்.பிக்களும் தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிக்க வேண்டுமெனஅமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வலியுறுத் தினார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி சட்ட மூலத்திற்கு கட்சிகளின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிப்பது என அமைச்சரவை தீர்மானித்தது.

(ச)

## உலகவங்கிப்....

பீற்றர் ஹரோல்டின் கருத்துக் குறித்து அரசில் அங்கம்வகிக்கும் ஜே.வி.பி. உட்பட பல தேசியவாதிக் கட்சிகள் தமது கடும் எதிர்பினை வெளிப்படுத்[illegible]யதோடு உலக வங்கி[illegible] வதிவிடப் பிரதிநிதியை [illegible] விட்டு வெளியேறக் கோ[illegible]யிருந்தது குறிப்பிடத்தக்கது.

(த-04)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செய்தியாளர் க. விஜயவாசனின் அன்புத் துணைவியார்



திருமதி
விஜயவாசன் இந்திராணி

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

# 20 வது ஆண்டு நினைவஞ்சலி

## தோழர் குமார்

### (லோறன்ஸ் வோல்டன் உதயகுமார்)

(குருநகர் -யாழ்ப்பாணம்)



தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை உச்சத்திலிருந்த வேளையில் ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தோழர் குமார் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முன்னணி அமைப்புக்களான ஈழ மாணவர் பொதுமன்றம், ஈழ வாலிபர் முன்னணி என்பவற்றின் அரசியல் நடவடிக்கைகளுக்கூடாக ஈ.பி. ஆர்.எல்.எவ் உடன் இணைந்துகொண்டார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலை படையில் முக்கிய பங்கு வகித்த தோழர் குமார் 20 வருடங்களுக்கு முன் 18.03.1985 அன்று குருநகர் பிரதேசத்தில் மறைந்திருந்த இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட தோழர் றொபேட் (த.சுபத்திரன்) இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் பின்னர் விடுதலை செய்யப்பட்ட போதும் தமிழ் இனத்துக்குள் வளர்ந்துள்ள ஜனநாயக விரோதப் போக்கு அவரையும் பலிகொண்டது.

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், உழைக்கும் மக்களின் விழவிற்காகவும் உழைத்த தோழர் குமாரினதும் அவரைப்போன்ற ஆயிரக்கணக்கான தோழர்களதும் இலட்சியங்கள் வெற்றிபெற உழைப்போம் எனஅவரது நினைவுநாளில் உறுதிபூணுவதுடன் அவருக்கு எமது புரட்சிகர அஞ்சலியை செலுத்திக்கொள்கிறோம்.

தோழர்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ.பி.ஆர்.எல்.எவ்)

(C-1168)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.